Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 148 | வெள்ளிக்கிழமை | சித்திரை 10 ஆம் நாள் 23 ஏப்ரல் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051

பக்கங்கள்: 20 | விலை : ரூ.30

செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

## நேற்று 520 பேருக்கு தொற்று!

யாழ்ப்பாணம், ஏப்.23

நாட்டில் நேற்று இரவு 10 மணி வரை 520 கொரோனாத் தொற்றாளர்

19

# கொரோனா தொற்று தீவிரம்; கொழும்பில் அவசர கூட்டம்

கொழும்பு, ஏப்ரல்23

நாட்டில் புதிதாக உருவாகியிருக்கும் கொரோனாத் தொற்று நிலைமையால் அடுத்து வரும் நாள்களில் சில முக்கிய முடிவுகள் எடுக்கப்படவுள்ளன என்று அரச உயர் மட்டங்களில் இருந்து அறியமுடிகின்றது.

நாட்டின் சில பகுதிகளை முடக்குவதாகவோ அல்லது நாடளாவிய ரீதியில் முடக்க நிலைமையை மேற்கொள்வது தொடர்பாகவோ இந்த முடிவுகள் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த விடயங்கள் தொடர்பில் இறுதி முடிவை எடுப்பதற்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் இன்று சிறப்புக் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது என்றும் அறிய முடிகின்றது.

இந்தக் கலந்துரையாடலில் மருத்துவ நிபுணர்கள், பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் அமைச்சர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். தற்போது கொரோனாத் தொற்று நிலைமை தீவிரமடைந்துள்ள

19

## அபாய கட்டத்தில் நாட்டு நிலைமை!

கொழும்பு, ஏப்.23

சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு பண்டிகைக் காலத்தில் சுகாதார வழிகாட்டுதல்களை பொதுமக்கள் கடைப்பிடிக்காததன் விளைவாக இலங்கையின் கொரோனாத் தொற்று நிலைமை ஆபத்தான கட்டத்தில் உள்ளது என்று சுகாதார அமைச்சு எச்சரித்துள்ளது.

சுகாதார சேவைகள் துணைப் பணிப்பாளர் நாயகம், மருத்துவர் எஸ்.எம்.அர்னோல்ட்நேற்றுப்பிற்பகல் சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில்

19

## துணைவேந்தருக்கு இருதய பாதிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.23

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா இருதய நோய் காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டதை அடுத்தே அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவருக்குக்

19

## பல்கலை நினைவுத் தூபி மீளவும் இன்று திறப்பு



யாழ்ப்பாணம், ஏப்.23

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடந்த ஜனவரி மாதம் 8ஆம் திகதி இரவோடு இரவாக இடித்தழிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி மீண்டும் கட்டப்பட்டு இன்று காலை 7 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. ஆனால் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தூபிக்கு எந்

19

## யாழ். அரச திட்ட பயனாளிகளை ஆய்வு செய்யவுள்ள அதிகாரிகள்

யாழ்ப்பாணம், ஏப். 23

யாழ்ப்பாண மாவட்டத்தில் அரச திட்டங்களுக்கான பயனாளிகள் தெரிவில் அரசியல் தலையீடுகள் காணப்படுகின்றன என்று தொடர்ச்சியாகத் தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில், வீட்டுத்

19

## மகாவலி அதிகார சபையின் காணி சுவீகரிப்பு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 23

முல்லைத்தீவு மாவட்டத்தில் மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமானது என்று வர்த்தமானியில் அடையாளப்படுத்தப்பட்டிருந்த பிரதேசங்களிலுள்ள 6 கிராம அலுவலர் பிரிவுகளையும் தம்மிடம் ஒப்படைக்குமாறு மகாவலி அபிவிருத்தி

19

## யாழ்ப்பாணத்தில் நேற்றும் 16 பேருக்கு கொவிட் உறுதி!

யாழ்ப்பாணம், ஏப்.23

யாழ்ப்பாணத்தில் மேலும் 16 பேருக்கு நேற்றுக் கொரோனோத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன்

19

## முச்சந்தி முரளி




## நள்ளிரவுக் கொள்ளைகளின் சூத்திரதாரி பொலிஸ் பிடியில்

### 18 பவுண் நகைகள், பணம் மீட்பு



யாழ்ப்பாணம், ஏப்.23

யாழ்ப்பாணத்தில் நள்ளிரவு நேரத்தில் வீடு புகுந்து வாள்களைக் காண்பித்துக் கொள்ளையில் ஈடுபடும் கும்பலின் பிரதான நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று

19

## தூக்குத் தண்டனைக் கைதிகளை பின்கதவால் விடுவிக்கிறது அரசு

### சரத் பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.23

தூக்குத் தண்டனைக் கைதியாக தண்டனை அனுபவித்து வரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவை விடுதலை

19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வீடுகளைக் கட்டிமுடிக்க மிகுதி நிதியை வழங்கவும்

*ஜனாதிபதியிடம் வலி.மேற்கு பிரதேச சபை கோரிக்கை*

**யாழ்ப்பாணம், ஏப். 23**

**வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பிரிவில், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் நடைமுறைப்படுத்தப்பட்ட 'செமட்ட செவன' வீடமைப்புத் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட வீடுகளைக் கட்டிமுடிக்க வழங்கப்பட வேண்டிய மிகுதிப் பணத்தை உடனடியாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலி.மேற்கு பிரதேச சபை கோரிக்கை விடுத்துள்ளது.**

முன்னைய அரசு ஆரம்பித்த அபிவிருத்தி நடவடிக்கைகளை, அடுத்த அரசு நடைமுறைப்படுத்தவேண்டிய பெரும் பொறுப்பை தற்போதைய அரசு புறந்தள்ளி செயற்படுவதால் வலி.மேற்கில் ஆயிரத்து 39 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று பிரதேச சபை தெரிவித்துள்ளது.

வலி.மேற்கு பிரதேச சபையின் 38 ஆவது அமர்வு தவிசாளர் த.நடனேந்திரன் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போது குறித்த வீட்டுத்திட்டத்தில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் தொடர்பில் உறுப்பினர்கள் உரையாற்றினார்.

கடந்த நல்லாட்சி அரசில் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சராக இருந்த சஜித் பிரேமதாச 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை ஊடாக வீட்டுத் திட்டங்களை வழங்கியிருந்தார். பரம்பரை பரம்பரையாக ஓலைக் குடிசைகளில் வசித்த எமது மக்கள் வீடுகள் கிடைத்த மகிழ்ச்சியில் தமது ஓலை வீடுகளையும் பிடுங்கி எறிந்துவிட்டு அந்த இடங்களில் அத்திபாரம் வெட்டி வீடுகளை அமைக்கத் தொடங்கினர்.

ஆனால், வீடுகளை அமைப்பதற்கு ஆறு லட்சம் ரூபா வழங்கப்பட வேண்டிய அந்த மக்களுக்கு, இதுவரை 60 ஆயிரம் ரூபா தொடக்கம் ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா வரையான பணம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. தமக்கு தெரிந்தவர்களிடம் கடன் பெற்றும், தங்களிடம் இருந்த நகைகளை அடகுவைத்தும் வீடுகளைக் கட்டத் தொடங்கிய மக்கள் இன்று நிர்க்கதியாகியுள்ளனர். கடன்காரர்களின் தொல்லைகள் தாங்க முடியாமல் தற்கொலை செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே, இந்த விடயத்தில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் உடனடியாகத் தலையிட்டு மக்களுக்கு மிகுதிப் பணத்தை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை முன்வைத்தனர்.

இறுதியில், குறித்த பிரேரணை அனைவராலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தக் கோரிக்கை சில தினங்களில் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்படும் என்றும் தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

(த-20)

# ஹிட்லரின் பாணியில் வேட்டையாட முயற்சி

*அரசு மீது சஜித் குற்றச்சாட்டு*

கொழும்பு, ஏப். 23

ஹிட்லர் ஆட்சியின் போது, தமது அரசியல் எதிரிகளை ஒரே இரவில் இல்லாதொழிப்பதற்கு ஹிட்லர் நடவடிக்கை எடுத்தார். அதேபோன்றதொரு முயற்சிதான் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான அறிக்கை ஊடாகவும் அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக் குழு அறிக்கை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றுகையில் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்ததாவது:

தமது அரசியல் எதிரிகளை ஒழிப்பதற்கும், அரசியல் ரீதியில் படுகொலை செய்வதற்கும் அரசியல் பழிவாங்கல் தொடர்பான அறிக்கை ஊடாக சூழ்ச்சி செய்யப்பட்டுள்ளது என்பது மிகத்தெளிவாகிறது. ஹிட்லர் அன்று ஒரு இரவில் செய்ததை, இந்த அரசு அறிக்கை ஊடாக செய்வதற்கு முற்பட்டுள்ளது.

இது அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட குழு அல்ல. எனவே, அரசியல் எதிரிகளை ஒழித்துக் கட்டுவதற்கான குழு என்ற பெயரே அதற்கு பொருத்தமானதாக இருக்கும். குடியுரிமையைப் பறிப்பதன் ஊடாக அநுரகுமார திஸாநாயக்க போன்றவர்களின் அரசியல் பயணத்தை தடுக்க முடியாது. எனினும், அவ்வாறானதொரு முயற்சி எடுக்கப்படுகின்றமையானது ஜனநாயகத்துக்கு விழும் மரண அடியாகும்.

சம்பந்தன் சிறந்த அரசியல் தலைவர். அவரின் குடியுரிமையைப் பறித்து வடக்குக்கு வழங்கவுள்ள செய்திதான் என்ன? ஜனநாயக வழிமுறை சரியில்லை, மீண்டும் ஆயுதம் ஏந்துங்கள் என்பதையா இதன் ஊடாக அரசு கூற முற்படுகின்றது?

சுமந்திரன் என்பவர் பிளவுபடாத இலங்கைக்குள் அரசியல் செய்யும் நிலைப்பாட்டிலேயே இருக்கின்றார். ஒருமித்த இலங்கையை நம்பும் சுமந்திரனின் குடியுரிமையைப் பறித்து, மீண்டுமொரு பிரபாகரன் உருவாக வேண்டும் என்ற செய்தியையா அரசு வழங்க முற்படுகின்றது. ரவூப் ஹக்கீமும் முஸ்லிம் மக்களின் தலைவர். ஜனநாயகத்தை விரும்பும் நடுநிலை அரசியல்வாதி. எனவே, அவரின் குடியுரிமையை பறித்து சஹ்ரான்களை உருவாக்குவதற்கு அரசு முற்படுகின்றதா?

ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை பல தடவைகள் வகித்துள்ளார். அவரின் குடியுரிமையை பறிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. சரத் பொன்சேகாவின் குடியுரிமை ஏற்கனவே பறிக்கப்பட்ட நிலையில் மீண்டுமொருமுறை அந்த முயற்சி எடுக்கப்படவுள்ளது. சம்பிக்க ரணவக்க, ராஜித சேனாரத்ன, மங்கள சமரவீர ஆகியோரும் இப் பழிவாங்கும் படலத்துக்கு இலக்கு வைக்கப்பட்டுள்ளனர். - என்றார்.

(த-44)

# தந்தை செலுத்திய ஓட்டோவில் சிக்குண்டு குழந்தை உயிரிழப்பு!

கொழும்பு, ஏப். 23

தந்தை செலுத்திய முச்சக்கர வண்டியில் சிக்குண்ட ஒன்றரை வயது ஆண் குழந்தையொன்று சம்பவ இடத்திலேயே உயிரிழந்த சம்பவம் பிபிலைப் பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

பிபிலைப் பகுதியின் நன்னபுராவ என்ற இடத்தைச் சேர்ந்த ஒன்றரை வயது நிரம்பிய ஆண் குழந்தையே உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தையின் தந்தை செலுத்திய முச்சக்கரவண்டி சில்லில், மேற்படி குழந்தை சிக்குண்டதையடுத்து, உடனடியாக அந்தக் குழந்தை மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டது. குழந்தையைப் பரிசோதித்த மருத்துவர்கள், அந்தக் குழந்தை ஏற்கனவே இறந்துவிட்டது என்று தெரிவித்துள்ளனர்.

இது குறித்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், முச்சக்கரவண்டியை செலுத்திய குறித்த குழந்தையின் தந்தையை கைது செய்துள்ளனர். (த-இ)

# விபத்தை ஏற்படுத்திவிட்டு வாகனம் தப்பியோட்டம்

*சமூக வலைத்தளங்களில் சிசிரிவி காணொலி வைரல்*

வடமராட்சி, ஏப்.23

வடமராட்சி, திக்கம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த ஆசிரியை ஒருவரை மோதித்தள்ளி விட்டு, டிப்பர் வாகனம் தப்பியோடிய காட்சி சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளது. திக்கம், விளையாட்டு மைதானத்துக்கு அருகில், காளி கோவிலடி பகுதியில் நேற்று முன்தினம் மாலை 4மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.வெற்றிலைக்கேணி பகுதியிலுள்ள பாடசாலையொன்றில் கடமையாற்றும் ஆசிரியையொருவர் மோட்டார் சைக்கிளில் வந்தபோது, குறுகிய வளைவொன்றில் வேகமாக வந்த டிப்பர் வாகனம் ஆசிரியை மீது மோதிவிட்டு தப்பியோடியது. காயமடைந்த ஆசிரியை பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

குறித்த டிப்பர் வாகனம் பொலிஸாரிடமிருந்து, தப்பியோடி வந்துள்ளது. நீண்ட தூரமாக பொலிஸார் அந்த டிப்பரை விரட்டி வந்துள்ளனர்.

திக்கம் பகுதிகளிலுள்ள சந்து, பொந்துகளிலெல்லாம் பொலிஸாருக்கு டிமிக்கி விட்டபடி தப்பியோடி வந்த டிப்பர், ஆசிரியை ஒருவரை மோதித்தள்ளி விட்டு தப்பியோடியது. அந்த டிப்பர் வாகனத்தின் பின்னால் 2 மோட்டார் சைக்கிள்களில் 3 பொலிஸார் விரட்டிச் சென்றனர். அவர்கள் விபத்தைப் பார்த்துவிட்டு அவரை மீட்பதை விடுத்து, தொடர்ந்தும் டிப்பரை விரட்டிச் செல்வது சிசிரிவியில் பதிவாகியுள்ளது. (ஜ-இ)

# இரசாயன உரங்களுக்கு எதிர்காலத்தில் தடை

கொழும்பு, ஏப். 23

இரசாயன உரங்களை இறக்குமதி செய்வது எதிர்காலத்தில் முற்றிலுமாக நிறுத்தப்படும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார். ஜனாதிபதி மாளிகையில் அரச நிறுவனங்களின் தலைவர்களின் சந்திப்பில் ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

இரசாயன உரங்களின் தாக்கங்கள் சிறுநீரக நோய் உட்பட பல தொற்றுநோய்களுக்கு வழிவகுத்துள்ளன என்று சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர். நாட்டின் சேதன உர உற்பத்தியை அதிகரிக்க அனைத்து கட்சிகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு செய்தால் உர இறக்குமதிக்காக வருடாந்தம் செலவிடப்படும். 400 மில்லியன் டொலர்களை மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தப்படலாம் - என்றார்.

(த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாத் தொற்றுக் காரணமாக இந்தியாவுக்கு உச்சக்கட்ட ஆபத்து!

*மூன்று மரபுக் கலப்புக் கொண்ட 'வங்காளத் திரிபு' அவதானிப்பு*

**புதுடெல்லி, ஏப். 23**

**இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தில் புதிய 'முத்திரிபு' வைரஸ் கிருமி ஒன்றைத் தாங்கள் அடையாளம் கண்டு பிடித்துள்ளோம் என்ற தகவலை அங்குள்ள நோய் ஆய்வு நிபுணர்கள் வெளியிட்டுள்ளனர்.**

கடந்த ஒக்ரோபரில் மகாராஷ்டிராவில் பரவத் தொடங்கிய இரட்டைத் திரிபு வைரஸ் இந்தியாவின் தொற்றாளர் எண்ணிக்கையைச் சமீப நாள்களாக உலக சாதனை அளவுக்கு உயர்த்திவிட்டுள்ளது. நாட்டின் சுகாதாரக் கட்டமைப்புகள் ஸ்தம்பித நிலையை எட்டி உள்ளன. இந்தக் கட்டத்தில் மூன்று திரிபுகளின் கலவையாக மூன்று வித மரபுத் தன்மையை ஓர் உடலில் கொண்ட வைரஸ் பற்றிய செய்தி வெளியாகி இருக்கிறது.

அதி வேகமாகப் பரவுதல், உடலின் நோய் எதிர்ப்பு சக்தியிடம் இருந்து தப்புதல் போன்ற தன்மைகளைக் கொண்ட இந்த கிருமியை 'வங்காளத் திரிபு' என்று அழைக்கின்றனர்.

இங்கிலாந்து பிரேசில் மற்றும் தென்னாபிரிக்கா போன்ற மூன்று திரிபுகளி னதும் கூட்டு வடிவமாகச் சந்தேகிக்கப்படும் முத்திரிபு வைரஸ், ஏற்கனவே வைரஸ் தொற்றியவர்களுக்கும் தடுப்பூசி ஏற்றிக்கொண்டவர்களுக்கும் மறுபடியும் தொற்றக்கூடிய வலிமை கொண்டதா ? என்ற அச்சம் இந்திய நோயியல் நிபுணர்களிடையே எழுந்துள் ளது.

'நீங்கள் முதலில் வேறு ஒரு திரிபின் தொற்றால் பாதிக்கப்பட்டிருந்தாலும் அல்லது நீங்கள் ஏற்கனவே தடுப்பூசி ஏற்றி இருந்தாலும் இந்த முத்திரிபு வைரஸிடமிருந்து தப்ப முடியாது' 'முத்திரிபு வைரஸ்' பற்றிய அச்சத்தை இவ்வாறு வார்த்தைகளில் வெளியிட்டிருக்கிறார் தேசிய மரபு உயிரியல் மருத்துவ நிலையத்தைச் சேர்ந்த மருத்துவர் சிறிதர் சின்னஸ்வாமி. எனினும் இந்த அச்சத்தை நிரூபிப்பதற்கான ஆய்வுகள் முற்றுப் பெறவில்லை. முத்திரிபு வைரஸின் மரபு வரிசை பற்றிய ஆராய்ச்சிகள் இனிமேல் தான் நடைபெறவுள்ளன.

இதேவேளை, இந்தியாவில் கடந்த 24 மணித்தியாலங்களில் (நேற்று முன்தினம் தொடக்கம் நேற்று வரை) மூன்று லட்சம் பேருக்கு தொற்று கண்டறியப்பட்டுள்ளது. இந்தியாவிலும் உலகளாவிய ரீதியிலும் அதிகூடிய ஒருநாள்தொற்று எண்ணிக்கை இது என்று கூறப்படுகிறது. (ம)



# சபாநாயகரின் செயற்பாடுகள் பக்கச் சார்பானவை!

*ஐக்கிய மக்கள் சக்தி சபையில் குற்றச்சாட்டு*

கொழும்பு, ஏப்.23

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பக்கச்சார்பாகவே செயற்பட்டு வருகின்றார் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி குற்றஞ்சாட்டியுள்ளது. நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. இதன்போது சட்டப்பிரச்சினையொன்றை முன்வைத்து கருத்து வெளியிடுகையிலேயே எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியல்ல இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இது தொடர்பில் அவர் கூறியவை வருமாறு,

"அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கைமீது நாமே விவாதம் கோரியிருந்தோம். அதற்கான கோரிக்கையை எமது கட்சியின் சார்பில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா விடுத்திருந்தார். எனினும், இது அரச தரப்பு நடவடிக்கையென சபாநாயகரால் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. நாம்தான் முதலில் விவாதம் கோரினோம். எனவே, சபாநாயகரின் தர்க்கம் இது விடயத்தில் தவறானதாகும்.

சபாநாயகரின் முடிவே இறுதித் தீப்பாகும் என்பதை நாம் ஏற்கின்றோம். ஆனால் இது விடயத்தில் அவர் வழங்கிய தீர்மானத்தை ஏற்கமுடியாது. அதற்கு எதிர்ப்பை வெளியிடுகின்றோம். பக்கச்சார்பாகவே தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. சபாநாயகர் பக்கச்சார்பாக செயற்படுவது தொடர்பில் கடிதம்கூட அனுப்பியிருந்தோம். ஆனால் அவர் தன்னை மாற்றிக்கொள்ளவில்லை. தொடர்ந்தும் பக்கச்சார்பாகவே செயற்படுகின்றார்." என்றார். (ந-44)

# பல்கலைகள் ஆரம்பம் இழுத்தடிப்பு

கொழும்பு, ஏப். 23

நாட்டில் மீண்டும் விஸ்பரூபம் எடுத்துள்ள கொரோனாத் தொற்றுக் காரணமாக முன்னர் திட்டமிட்டவாறு எதிர்வரும் 27ஆம் திகதி நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களைத் திறக்கப்படமாட்டாது என்று கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். பல்கலைக்கழகங்களை திறப்பது மேலும் இரு வாரங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டி னார். (ஒ.இ)

# தமிழீழத்தை எதிர்த்தோர் சீன ஈழத்துக்கு ஆதரவா?

*ராஜித கேள்வி*

கொழும்பு, ஏப். 23

தமிழ் ஈழத்துக்கு எதிராக, கருத்துக்களை வெளியிட்டவர்கள் இன்று சீன ஈழத்தை தோற்றுவிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கின்றனர் இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன குற்றஞ்சாட்டியுள்ளார். கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

தமிழ் ஈழத்துக்கு எதிராக கருத்துக்களை வெளியிட்டவர்கள் இன்று சீன ஈழத்தை தோற்றுவிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கின்றனர். அரசின் இவ்வாறான செயற்பாடுகளால் இலங்கையின் இறையாண்மைக்கும், தனித்துவத்தன்மைக்கும் பாதிப்பு ஏற்படும். என்றார். (ம-4)



# நாடாளுமன்ற வளாகத்தில் அடிதடி; விசாரணைக்கு எழுவரடங்கிய குழு!

கொழும்பு, ஏப்.23

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட மோதல் நிலை தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக 7 சிரேஷ்ட உறுப்பினர்களை உள்ளடக்கிய குழுவொன்றை நியமிப்பதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நடவடிக்கை எடுத்துள்ளார். இக்குழுவால் முன்வைக்கப்படவுள்ள அறிக்கையின் பிரகாரம் அடுத்தகட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என சபாநாயகர் நேற்று அவைக்கு அறிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. இதன்போது நேற்றுமுன்தினம் சபைக்குள்ளும், சபை வளாகத்திலும் ஏற்பட்ட முறுகல் மோதல் நிலைமை தொடர்பில் ஆளும் மற்றும் எதிரணி எம்.பிக்கள் கருத்துகளை முன்வைத்தனர். அதன்பின்னர் அதற்கு பதிலளிக்கையிலேயே சபாநாயகர் மேற்கண்டவாறு கூறினார்.

"சபைக்குள் நேற்று (நேற்று முன்தினம்) அசாதாரண சம்பவமொன்று இடம்பெற்றது. இப்படியான நடவடிக்கையை எந்தவொரு உறுப்பினரும் அனுமதிக்கமாட்டார்கள் என்றே நம்புகின்றேன். நேற்றைய (நேற்றுமுன்தினம்) சம்பவம் வெட்கப்படக்கூடியதொன்றாகும்.

இது தொடர்பில் முழுமையான விசாரணை நடத்துவதற்காக 7 சிரேஷ்ட உறுப்பினர்களை உள்ளடக்கிய வகையில் குழுவொன்றை அமைக்கின்றேன். அந்தக் குழுமுன்வைக்கும் விதப்புரைகளின் பிரகாரம் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்." என்றார். (ந-44)

# நான் நடுநிலைவாதி!

*கூறுகிறார் சபாநாயகர்*

கொழும்பு, ஏப்.23

"நான் பக்கச்சார்பாக செயற்படவில்லை. நிலையியற் கட்டளைகளின் பிரகாரமே தீர்மானங்களை எடுக்கின்றேன்." என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

எதிரணி உறுப்பினர்களால் நாடாளுமன்றில் நேற்று முன்வைக்கப்பட்ட கருத்துகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "விவாதம் தொடர்பில்கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே முடிவெடுக்கப்படுகின்றது. எனினும், அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான அறிக்கைமீதான விவாதம் குறித்து முடிவெடுக்கமுடியாமல் போனது. இதையடுத்தே நிலையியற் கட்டளையின் 23 ஆம் பிரிவின் பிரகாரம் நான் முடிவெடுத்தேன். ஆளும் மற்றும் எதிரணி சார்பில் யோசனைகள் முன்வைக்கப்பட்டிருந்தால், அரசின் யோசனைக்கே முன்னுரிமை வழங்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. அதன்பிரகாரமே செயற்பட்டேன். மாறாக பக்கச்சார்பாக முடிவெடு க்கவில்லை." என்றார். (ந-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்று நிலைமை இந்த வாரம் தணிவு

## மாவட்டச் செயலர் மகேசன் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஏப். 23**

**கொரோனாத் தொற்று கடந்த வாரம் அதிகரித்துக் காணப் பட்ட நிலையில் இந்த வாரம் குறைவடைந்துள்ளது என யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.**

யாழ்ப்பாண மாவட்டத்தின் கொரோனா நிலைமை தொடர் பில் ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண் டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது: கடந்த 6 மாதங்களில் ஆயிரத்து 155 பேருக்கு தொற்று ஏற்பட்டுள் ளது. 17 பேர் உயிரிழந்துள்ள னர். தற்போது ஆயிரத்து 547 குடும்பங்கள் தனிமைப்படுத்தப் பட்டுள்ளன.
திருநெல்வேலியில் கண்கா ணிப்பு வலயமாக அறிவிக்கப் பட்ட பாரதிபுரம் கிராமம் இன்று விடுவிக்கப்படவுள்ளது. அந்தக் கிராமத்தில் நேற்றுமுன்தினம் 97பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனைகளில் 3 பேருக்கே தொற்று உறுதிப்படுத் தப்பட்டுள்ளது.
யாழ்ப்பாண மாவட்டத்தில் தனி மைப்படுத்தப்பட்ட 4 ஆயிரத்து 823 குடும்பங்களுக்கு 50.49 மில்லியன் ரூபா அரச நிதியில் உதவிப் பொருள்கள் வழங்கப் பட்டுள்ளன.
எதிர்வரும் வாரங்களில் தொற்று நிலைமை தீவிரமடையலாம் என்று எதிர்வுகூறல்கள் விடுக்கப் படுகின்றன. எனவே பொதுமக் கள் அவதானமாகச் செயற்பட வேண்டும், என்றார். (ஓ.20,26)





## தேங்காய் மட்டைக்கு தட்டுப்பாடு; தும்புத் தொழிலாளர்கள் பாதிப்பு

கிளிநொச்சி,ஏப்.23
கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது தேங்காய் மட்டை களுக்கு பெரிய அளவில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று தும்புத் தொழிற்சாலை தொழிலாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.
அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,
கிளிநொச்சி, முழங்காவில், குமுளமுனை கிராமத்தில் தும்புத் தொழிற்சாலை ஒன்று இயங்கி வருகிறது.
குறித்த தொழிற்சாலையில் அதே கிராமத்தில் வசிக்கும் பல பெண் தலைமைத்துவ குடும்பங்களைச் சேர்ந்தோர் பணி புரிகின்றனர். இந்தத் தொழிற்சாலையால் பல குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்தைக் கொண்டு செல் கின்றன.
இந்நிலையில் தற்போது எமது மாவட்டங்களில் இருந்து தேங்காய் மட்டைகள் தென் மாகாணங்களுக்கு ஏற்றப்ப டுவதால் பல பெண்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படு கிறது.
அத்துடன் எமது பிரதேசங்களில் இருந்து தேங்காய் மட் டைகள் அதிகளவில் ஏற்றுமதி செய்து வருவதால், தொழில் நிலை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் தற்போது தும்புத் தொழிற்சலைகள் பல்வேறு இடங்களில் மூடப்பட்டு வருகின்றன.
எனவே குறித்த பிரச்சினைக்குத் தீர்வை பெற்றுத் தரு மாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக் கின்றோம்- என்றனர். (ஐ-113)





அண்மையில் அதிகளவானோர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளா கிய யாழ்ப்பாண நகரப் பகுதியின் பஸார் வீதிப் பகுதி நீரூற்றி கழுவப் பட்டு கிருமித் தொற்று விசிறும் செயற் பாடு நேற்று காலை, இராணுவத்தின் 512 ஆவது படைப்பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டது. (ந-20)



## கடுகதி ரயிலில் மோதுண்டு 16 எருமை மாடுகள் சாவு

வவுனியா,ஏப்.23
கடுகதி ரயிலில் மோதுண்டு 16 எருமை மாடுகள் உயிரிழந்துள் ளன. இந்த விபத்து வவுனியா ஓமந்தை பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றது.
யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயிலில், ஓமந்தை பகுதியில் மேய்ச்சலில் ஈடுபட்டிருந்த எருமை மாடுகள் சிக்கி உயிரிழந்துள்ளன.
இதன் காரணமாக பல லட்சம் பெறுமதியான 16 எருமை மாடு கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தன என்று தெரிவிக்கப்பட் டது.மேய்ச்சல் தரை இன்மையால் பலரும் தமது மாடுகளை மேய்ச்சலுக்காக வேறு இடங்களுக்கு கொண்டு செல்ல முடியாத நிலையில் அவை வீதியோரங்கள் மற்றும் ரயில் தண்டவாளங் களுக்கு அருகில், மேய்ச்சலில் ஈடுபட்டு வரும் நிலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ஐ-இ)

## தம்பதியினர் மீது வாள்வெட்டு

கிளிநொச்சி,ஏப்.23
வீட்டுக்குள் புகுந்த கும்பல் ஒன்று, வீட்டில் இருந்த தம்பதியினர் மீது சர மாரியான வாள்வெட்டை மேற் கொண்டுவிட்டு தப்பி சென்றுள்ளது. இந்தச் சம்பவம் தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புளியம்பொக் கணை முசுரம்பட்டி பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.
வாள்வெட்டில் காயமடைந்த தம்பதி யினர் தருமபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டனர்.
சம்பவம் தொடர்பான விசாரணை களை தருமபுரம் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ஐ-113)

## கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளராக க.விஜிந்தன் தெரிவு

முல்லைத்தீவு, ஏப்.23
கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளராக கமலநாதன் விஜிந்தன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என அறி விக்கப்பட்டுள்ளது.
தவிசாளர் பதவிக்காக பொதுஜன பெரமுன கட்சி சார்பில் அன்ரனி ரங் கதுசாரவும்,தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு சார்பில் க.விஜிந்தனும் போட்டி யிட்டுள்ள நிலையில், வாக்கெடுப்பு தொடர்பில் சபை உறுப்பினர்களி டையே விருப்பு கேட்டறியப்பட்டது.
இந்நிலையில் இரகசிய வாக்கெடுப் புக்காக 5 வாக்குகளும், பகிரங்க வாக்கெடுப்புக்காக 14 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இதன் அடிப்படை யில் பகிரங்க வாக்கெடுப்பு நிகழ்த்த தீர்மானிக்கப்பட்டது. இந்த வாக்கெ டுப்பில் கமலகாந்தன் விஜிந்தனுக்கு ஆதரவாக 15 வாக்குகளும், அன் ரனி ரங்கதுசாரவுக்கு ஆதரவாக நான்கு வாக்குகளும் அளிக்கப்பட் டதுடன், மூவர் நடு நிலை வகித்துள்ள னர்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங் காளிக் கட்சிகளுக்கிடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்ப டையில், புளொட் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் க.தவராசா தவிசா ளர் பதவியை வகித்து வந்தார். இவர் கடந்த மார்ச் மாதம் 18 ஆம் திகதி தனது பதவி விலகலை உத்தியோக பூர்வமாக அறிவித்திருந்தமை குறிப் பிடத்தக்கது. (ந-15.246.70)

## கஞ்சா வைத்திருந்த குடும்பப் பெண் கைது

வவுனியா,ஏப்.23
வவுனியா, உக்கிளாங்குளம் பகுதியில் கஞ்சா போதைப்பொருள் வைத்திருந்த குற் றச்சாட்டில் குடும்பப் பெண் ஒருவரை பொலி ஸார் நேற்றுமுன்தினம் கைது செய்துள் ளனர்.
வவுனியா போதை ஒழிப்பு பிரிவுப் பொலி ஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து குறித்த பகுதியில் உள்ள வீடொன்றில் சோதனை நடத்தியபோது மறைத்து வைக்கப்பட்டி ருந்த நிலையில் கஞ்சா போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து குறித்த கஞ்சா போதைப்பொருளைக் கைப் பற்றிய பொலிஸார் அதனை மறைத்து வைத்திருந்த குற்றச்சாட் டில், குடும்ப பெண் ஒருவரை கைது செய்துள்ளனர். சந்தேக நபரான பெண்ணை நீதிமன்றில் முற்ப டுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள் ளது என பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-18)

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# அபாயம் அறிவோம்!

கொரோனாப் பெருந்தொற்று விடயத்தில் வடக்கு மாகாணத்துக்கு ஒரு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அடுத்த மூன்று வாரங்களுக்கு வடக்கில் தொற்று மிகையாக அதிகரித்துச் செல்ல வாய்ப்புள்ளது என்று எச்சரித்துள்ளார் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ. கேதீஸ்வரன்.

நாளுக்கு நாள் கொரோனாவின் பிடி இறுகிக் கொண்டு செல்கின்ற போதிலும் எமக்கு அதுபற்றிய அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை. 'கொரோனாவுடன் வாழப் பழகுங்கள்' என்பதற்குத் தவறான விளக்கம் கற்பித்து விட்டோமோ என்று எண்ணத் தோன்றுகின்றது. 'கொரோனாவுடன் வாழப் பழகுதல்' என்றால் கொரோனாத் தொற்றுக்கு உட்பட்டு வாழ்தல் என்று அர்த்தம் இல்லை. இந்தப் பெருந் தொற்றால் ஏற்பட்டுள்ள இயல்பு மாற்றங்களை அனுசரித்து வாழ்தல் என்பதே அதன் அர்த்தம். ஆனால் அந்த 'அனுசரித்தல்' என்பதை 'வலிந்து சென்று தொற்றுக்கு உட்படுதல்' என்பதாக நாம் ஆக்கி வைத்துள்ளோம் என்பது கவலைக்குரிய விடயம்தான்.

கடந்த வருடம் இதே காலப்பகுதியில் எங்கோ ஒரு மூலையில் தொற்றாளர்கள் அவதானிக்கப்பட்டுக் கொண்டு இருந்தனர். அதன்போது பேரச்சம் கொண்டவர்களாக, சுகாதார நடைமுறைகளை தவறாது பின்பற்றினோம். பொறுப்புணர்ந்து செயற்பட்டோம். பின்னர் படிப்படியாக இந்த விழிப்புணர்வு நடவடிக்கைகள் இன்று எம்மைவிட்டுத் தொலைதூரம் சென்றுவிட்டன. இன்று எம்மால் பெயர்சொல்லி அழைக்கப்படும் நபர்கள் தொற்றுக்கு உட்படுகின்றனர். ஆனால், அதுபற்றி அக்கறை எம்மிடத்தில் இல்லை. அச்சம் என்பது அறவேயில்லை.

மக்களிடத்தில் இந்த அசண்டையீனம் வந்துசேர்வதற்கு அரசும் முக்கிய காரணம் என்பதை மறுத்துவிட முடியாது. கடந்த வருடத்தில் கொவிட் செயலணியிடம் இருந்த வினைத்திறனை இப்போது காணக்கிடைக்கவில்லை. போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கொரோனாத் தடுப்பு நகர்வுகள் இன்று இல்லை என்றாகிவிட்டன. எச்சரிக்கைகளும், விழிப்புணர்வுகளும், கட்டுப்பாட்டு நடவடிக்கைகளும் இன்று பெயரளவில் மட்டுமே. ஆக, அரசன் எவ்வழியோ குடிகளும் அவ்வழியே என்றாகிவிட்டது நிலை.

இதே மெத்தனப்போக்குத்தான் அண்மைக்காலமாக இந்தியாவில் இருந்தது. தடுப்பூசியைத் தயாரித்துக் கைவசம் வைத்திருந்த இந்தியா கட்டுப்பாடுகளை பெரியளவில் இறுக்கவில்லை. விருப்பம்போன்று நாட்டைத் திறந்துவிட்டதன் விளைவை இன்று இந்தியா அனுபவிக்கின்றது. இந்தியா இன்று உலகிலேயே கொரோனாவால் பேரழிவைச் சந்திக்கக்கூடிய நாடுகளின் பட்டியலில் முன்னணியில் உள்ளது. அங்கு நேற்றுமுன்தினம் மட்டும் 3 லட்சம் தொற்றாளர்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். சுமார் 2 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். சொந்தமாகத் தயாரித்துவைத்துள்ள தடுப்பூசிகள் இந்தியாவை மீட்டெடுக்கலாம். ஆனால் இலங்கையின் கதி என்ன?.

மீண்டும் ஒரு பொதுமுடக்கத்துக்கு நாடு தள்ளப்படுமானால், அரச இயந்திரத்தின் பொருளாதாரமே அடியோடு முடக்கம் காணும். ஆதலால், எமது பாதுகாப்புக்கு நாம்தான் பொறுப்பாளிகள். சுய பாதுகாப்பும், அவதானமுமே எம்மைக் காக்கப் போகும் கவசங்கள். பொறுப்புணர்ந்து செயற்படுவோம்.





# சிறப்பான கல்வியின் மூலமே நாட்டை முன்னேற்ற முடியும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

**கொழும்பு, ஏப். 23**

**பிள்ளைகளை புத்தகங்களின் பக்கம் ஊக்குவித்து, நாட்டையும் உலகையும் நேசிக்கின்ற வினைத்திறன்மிக்க பிரஜைகளாக சமூகமயப்படுத்துவது அவசியமாகும். சிறப்பான கல்வியின் மூலமே நாட்டை முன்னேற்ற முடியும். இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.**



'ரட்டக் வடிணா பொதக்' (நாட்டுக்குப் பெறுமதியான நூல்) 10 ஆயிரம் நூல்களை எழுதும் தேசிய வேலைத்திட்டத்தின் முதலாம் கட்டத்துக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கல்வித்துறையின் மேம்பாட்டுக்கு அவசியமான மாற்றங்கள் உடனடியாக அறிமுகப்படுத்தப்படும். நாட்டுக்குப் பயனளிக்கக்கூடிய மற்றும் பொருளாதாரத்துக்கு நேரடியாகப் பங்களிக்கக்கூடிய பிள்ளைகளை எதிர்காலத்துக்குக் கையளிப்பது அரசின் நோக்கம் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கொவிட் 19 தொற்றுக் காலத்தில் பாடசாலைகள் மூடப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில், பிள்ளைகளின் எழுத்தாற்றல்கள் மற்றும் வாசிக்கும் திறனை மேம்படுத்தும் நோக்கில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தற்போது 43 ஆயிரம் ஆக்கங்கள் நாட்டின் அனைத்து மாகாணங்களிலிருந்தும் கிடைத்துள்ளன. தெரிவுசெய்யப்பட்ட 100 ஆக்கங்களை அச்சிட்டு அரச விருது வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ளோம் என்று ஜனாதிபதி தெரிவித்தார். நாட்டின் 9 மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தெரிவுசெய்யப்பட்ட 30 மாணவர்களுக்கு அடையாளமாக ஜனாதிபதியால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

தேசிய நூலக மற்றும் ஆவணவாக்க சேவைகள் சபையின் தலைவர் சொனால குணவர்தன 'ஜாதிக ஜனகதா சங்கிரஹய' தேசிய கிராமிய இலக்கிய சஞ்சிகையின் முதலாவது தொகுதியை ஜனாதிபதிக்கு கையளித்தார்.

கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், மின்சக்தி அமைச்சர் டளஸ் அழகப்பெரும, கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா ஆகியோருடன் கல்வி அமைச்சின் அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உட்பட பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர்- என்றுள்ளது. (ம-4)

# பாடசாலைப் புத்தகங்களிலும் அடிப்படைவாதக் கல்வியாம்!

கொழும்பு, ஏப். 23

அடிப்படைவாதத்தைப் போதிக்கும் வகையில் பாடசாலைப் புத்தகங்களிலும் சில விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவற்றை நீக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இவ்வாறு பாதுகாப்புச் செயலர் கமால் குணரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அடிப்படைவாதத்தைப் போதிக்கும் புத்தகங்களை நாட்டுக்குள் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவை சுங்கத் திணைக்களத்தினரால் முறியடிக்கப்பட்டுள்ளன.

சிலை வழிபாடுகளில் ஈடுபடுவோரைக் கொல்லுதல் மற்றும் வேற்றுமதங்களைச் சார்ந்தோரைத் துன்புறுத்துதல் உள்ளிட்ட விடயங்கள் பாடசாலைப் புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதனைக் கண்டறிந்துள்ளோம். அவற்றை நீக்க நடவடிக்கை எடுத்துள்ளோம் - என்றார்.

(ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈஸ்டர் தாக்குதல்:

# குற்றவாளிகளை மன்னிப்பதற்கு ரஞ்சித் ஆண்டகை தயாராம்!!!

கொழும்பு, ஏப். 23

**ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய குற்றவாளிகளை நாம் மன்னிப்பதற்கு தயாராக இருக்கின்றோம். ஆனால் குற்றவாளிகள் யார் என்பதைக் கோரும் உரிமை எமக்குள்ளது. ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் அரசியல் தலையீடுகள் காரணமாக உரிய முறையில் முன்னெடுக்கப்படவில்லை. இந்த அரசும் அதில் தோல்வியடைந்து விட்டது. இவ்வாறு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.**



ஈஸ்டர் தாக்குதலின் இரண்டாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தில் நடைபெற்ற விசேட ஆராதனையின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

ஈஸ்டர்தாக்குதல்யாருடையதேவையை நிறைவேற்ற மேற்கொள்ளப்பட்டது என்ற உண்மை வெளிப்படுத்தப்படவில்லை. அரசு இதில் தோல்வியடைந்துள்ளது. அரசியல் நோக்கங்களால் அரசு பின்வாங்குகின்றது.

தாக்குதலின் சூத்திரதாரிகளைக் கண்டறிய உரிய விசாரணைகளை அதிகாரிகள் பக்கச்சார்பற்று முன்னெடுக்கவில்லை. அரசியல் பின்னணி காரணமாக அவர்களால் அதனை மேற்கொள்ள முடியவில்லை.

மதத்தை இலக்கு வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்படவில்லை. மத அடிப்படைவாதமானாலும் ஏனைய அடிப்படை வாதங்களானாலும் அதன் ஊடாக ஒரு சிலரின் தேவைகள் நிறைவேற்றப்படுகின்றன.

ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் முஸ்லிம்களுக்குப் பாதிப்பு வராமல் நாம் பாதுகாத்தோம். ஆனால் எமது நியாயம் கோரிய போராட்டத்துக்கு முஸ்லிம்கள் பங்களிப்புச் செய்யவில்லை. ஆனால் ஹசன் மௌலான மௌலவி இன்று குரல் கொடுத்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் நாடாளுமன்றத்தில் தற்போதைய காலங்களில் வெளிப்படுத்தப்பட்டு வரும் கருத்துக்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படவேண்டும் - என்றார். (ஒ.இ)

ஒரு சாராருக்கு மட்டுமன்றி

## பாதிப்படைந்த அனைவருக்கும் நீதி கிடைக்க வேண்டும்

*மனிதஉரிமைகள் குழு இயக்குநர் அருட்பணி எஸ்.ஜெயபாலன் குரூஸ் தெரிவிப்பு*



மன்னார்,ஏப்.23

ஒரு சாராருக்குமட்டுமல்லாமல் பாதிப்படைந்துள்ள அனைவருக்கும் நீதி கிடைக்கப்பெற வேண்டும் என்று மன்னார் மறைமாவட்ட மனிதஉரிமைகள் குழு இயக்குநர் அருட்பணி எஸ்.ஜெயபாலன் குரூஸ் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற மிலேச்சத்தனமான குண்டுதாக்குதலில் இறந்தவர்களின் இரண்டாவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் மன்னார் மறைமாவட்டத்தின் வேதசாட்சிகளின் ஆலயத்தில் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

நீதிக்காக குரல் கொடுக்கும் யாராக இருந்தாலும் அது ஒரு சாராருக்காக மட்டுமல்லாது அனைத்து பாதிப்படைந்த மக்களுக்காகவும் அமையப்பெற வேண்டும். அன்று மறைந்த மன்னார் ஆயர் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நீதிகோரி ஐ.நாவை நாடியபோது அதனை எள்ளி நகையாடியவர்கள் இன்று அவர்களே அவ்வழியைத் தெரிவு செய்கின்றனர்.

உயிர்த்த ஞாயிறு அன்று இலங்கையின் பல இடங்களில் ஒரே நேரத்தில் குண்டு வெடிப்பு சம்பவங்கள் இடம்பெற்றன என்பது நமக்கு தெரிந்த விடயமாகும்.

கொழும்பு மறைமாவட்ட பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் முன்னெடுப்பினாலேயே இவ் தாக்குதல் தொடர்பாக பல கோணங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. ஆகவே நீதியானது ஒரு சாராருக்கு மட்டுமல்லாது பாதிப்படையும் ஒவ்வொருவருக்கும் கிடைக்கப்பெற வேண்டும் - என்றார். (ஐ-60)

ஈஸ்டர் தாக்குதல்:

## அரசுக்கு அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டாம்

*பேராயருக்கு ஞானசாரர் எச்சரிக்கை*

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் கோத்தாபய அரசுக்கு தேவையற்ற அழுத்தங்களை பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை பிரயோகிக்கின்றார். இது தேவையற்றது. அரசுக்கு அழுத்தங்களைப் பிரயோகிப்பது உண்மையான குற்றவாளி களையே காப்பாற்றும். இவ்வாறு பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலர் ஞானசார தேரர் தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

2010ஆம் ஆண்டிலிருந்து இஸ்லாமிய அடிப்படைவாதம் இந்த நாட்டில் வேரூன்றத் தொடங்கியது. நாம் அந்தக் காலப் பகுதியிலிருந்து இதனை வலியுறுத்தினாலும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இது தொடர்பில் அலட்சியமாகச் செயற்பட்ட அனைவரும் ஈஸ்டர் தாக்குதலுக்குப் பொறுப்புக்கூற வேண்டும்.

மக்கள் விடுதலை முன்னணியும், ஐக்கிய மக்கள் சக்தியும் ஈஸ்டர் தாக்குதலை தங்கள் அரசியலுக்குப் பயன்படுத்திக்கொள்கின்றார்கள். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் கேள்வி எழுப்ப அவர்களுக்கு அருகதையில்லை. மக்கள் விடுதலை முன்னணியின் தேசியப் பட்டியலில் பெயரிடப்பட்டிருந்த ஒருவரே, ஈஸ்டர் தாக்குதலாளிகளின் தந்தை. அவ்வாறான நிலையில் மக்கள் விடுதலை முன்னணி ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் எப்படிக் கேள்வி எழுப்பலாம்?

2018ஆம் ஆண்டு கட்டார் தொண்டு நிறுவனம் ஒன்று கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த அமைப்புடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தொடர்புகளைப் பேணுகின்றார். பயங்கரவாத இஸ்லாமிய அமைப்புக்களுக்கு நிதியுதவி வழங்குவது இந்த நிறுவனம்தான்.



இவர்கள் தங்களின் குறுகிய அரசியலை நிறைவேற்றிக்கொள்ள ஈஸ்டர் தாக்குதலைக் கருவியாகப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். இஸ்லாமிய அடிப்படைவாதிகள் நல்லாட்சி அரசை இயக்கினார்கள். அரச ஆதரவுடன் இஸ்லாமிய அடிப்படைவாதம் தலைதூக்கியது.

இஸ்லாமிய அடிப்படைவாதம் புற்றுநோய் போன்றது. அதனை விரைவாக இல்லா தொழிக்க முடியாது. பொறுமையுடன் கையாள வேண்டும். இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புக்கள் மாத்திரமே நாட்டில் தடை செய்யப்பட்டுள்ளன. அவ்வமைப்புக்களின் கொள்கைகள் வியாபித்துள்ளன. அடிப்படைவாதிகள் எந் நேரத்திலும் தாக்குதல்களை முன்னெடுக்கலாம். இஸ்லாமிய அடிப்படைவாதிகள் பௌத்த துறவி போன்று வேடமிட்டும் தாக்குதல்களை நடத்தலாம். மீகலாவ பிரதேசத்தில் பிக்கு போல் வேடமிட்டு இனந்தெரியாத நபர் ஒருவர் விகாரைக்கு வந்த சம்பவம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. பிக்குகளை கருவியாகக் கொண்டு தாக்குதல்கள் இடம்பெறலாம் - என்றார். (ஒ.இ)

## 7,110 கிலோ மஞ்சள் மீட்பு

நாட்டுக்குள் சட்ட விரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 7 ஆயிரத்து 110 கிலோ எடையுள்ள உலர்ந்த மஞ்சள் அடங்கிய கொள்கலன் சுங்கப் பிரிவால் கைப்பற்றப்பட்டது.

அத்துடன் சந்தேகத்துக்கிடமான 3 கொள்கலன்கள் தொடர்பில் மேலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ம-4)

# எந்த மதத் தலம் மீதும் தாக்குதல் நடக்கலாம்

*தற்கொலையாளிகளுடன் பயிற்சி பெற்றோர் இன்னமும் நாட்டுக்குள் உலாவுகின்றனர் என்கிறார் சோபித தேரர்*

கொழும்பு, ஏப். 23

ஈஸ்டர் தற்கொலைத் தாக்குதல் குண்டுதாரிகளுடன் பயிற்சி பெற்றவர்கள் இன்னமும் சமூகத்தில் நடமாடுகின்றனர். அவர்கள் தங்கள் கொள்கைகளை நிறைவேற்ற எந்த மதத் தலத்தின் மீதும் தாக்குதல் நடத்தலாம். இந்தச் சந்தேகம் நாட்டு மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. அதனைப் போக்குவது அரசின் கடமை. இவ்வாறு ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

ஈஸ்டர் தாக்குதலின் இரண்டாம் ஆண்டு நினைவேந்தல் கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

முன்னைய அரசும் பாதுகாப்பை உறுதிப்படுத்தவில்லை. தற்போதைய அரசும் உறுதிப்படுத்தவில்லை.

பயங்கரவாதத்தின் ஒரு முகமே ஈஸ்டர் தாக்குதலாக வெளிப்பட்டது. ஆனால் இப்போது அதன் ஏனைய ரூபங்கள் வெளிப்படுகின்றன. தற்போது உணவில் விசத்தன்மை என்ற ரூபம் தெரிகின்றது. எஸ்.எல்.எஸ். தரச் சான்றிதழ் மீது மக்கள் நம்பிக்கையிழந்து விட்டார்கள். இதற்கு அரசு பொறுப்புக்கூற வேண்டும்.



ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக சர்வதேச முஸ்லிம் அமைப்பு ஒரு பில்லியன் ரூபாவை வழங்கியது. அந்த நிதி மக்கள் நலனுக்காக பயன்பட்டதா? இது தொடர்பில் விசாரணை நடத்துமாறு அரசிடமும், புலனாய்வுப் பிரிவிடமும் கோருகின்றேன் - என்றார். (ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.டி.எச். அவசர சிகிச்சைப் பிரிவில் நிரம்பி வழியும் தொற்றாளர்கள்

கொழும்பு, ஏப்.23

**தமிழ் சிங்கள புத்தாண்டு காலப் பகுதிக்கு பின்னர், கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று கொழும்பு தேசிய தொற்று நோயியல் மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் ஹஷித்த அத்தநாயக்க தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்: கொழும்பு தேசிய தொற்று நோயியல் மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் தற்போது 150 கொரோனாத் தொற்றாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். புத்தாண்டுக்கு முன்னர் சேர்க்கப் பட்டவர்களும் இவர்களில் அடங்குகின்றனர்.

எனினும், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களைச் சேர்க்கும் எண்ணிக்கை, கடந்த காலங்களை விடவும் தற்போது அதிகரித் துள்ளது. எனவே நாட்டு மக்கள், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி, செயற்படுவது அத்தியாவசியமானது - என்றார். (ஐ-22)

# அரச நிறுவனங்களை கண்காணிக்கவும்!

## இராஜாங்க அமைச்சர்களுக்கு ஜனாதிபதி பணிப்பு



கொழும்பு, ஏப். 23

செயற்திறன்மிக்க அரச சேவையை, இராஜாங்க அமைச்சர்களின் நேரடித் தலையீடு மற்றும் தொழிநுட்பப் பயன்பாட்டின் மூலம் எட்ட முடியும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர்களுடன் மாதாந்தம் இடம்பெறும் மீளாய்வுக் கூட்டம் ஜனாதி பதி மாளிகையில் இடம்பெற்றது. அதில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

கொவிட் தொற்றுக் காலத்திலும் கூட 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத் தில் குறிப்பிட்ட பல்வேறு விடயங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மக்களிடம் காணப்படும் மனக்குறைக்குக் காரணம் சில அரச நிறுவனங்களில் நிலவுகின்ற செயற்திறனற்ற சேவை, ஊழல் மற்றும் தாமதம் போன்றவையாகும். சில நிறுவனங்களின் தலைவர்கள் தமது பணிகளை உரியவாறு நிறைவேறத் தவறு வதாக அறியக் கிடைத்துள்ளது என்று ஜனாதிபதி தெரிவித்தார். அரசு எதிர்பார்க்கும் இலக்கை நோக்கிச் செல்லாத அவ்வாறான நிறுவனங்கள் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி இரா ஜாங்க அமைச்சர்களுக்குப் பணிப்புரை விடுத்தார். அந்த நிறுவனங்களுக்கு வேறு அதிகாரிகளை நியமிக்க வேண்டுமெனில், அதற்கும் தான் தயாரென்றும் ஜனா திபதி தெரிவித்தார். மக்களின் பிரச்சினை களைக் காது கொடுத்து கேட்பதுடன், மக்களிடமிருந்து தூர விலகி நிற்காமல் செயற்படுங்கள் என்றும் ஜனாதிபதி இராஜாங்க அமைச்சர்களிடம் தெரிவித்தார்.

இதே வேளை உற்சவ காலங்களில் அத்தி யாவசியப் பொருள்களின் விலை உயர்வடைவது சாதா ரணமானது. அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதியால் விவசாயிகளின் விளைச்சலை விற்பனை செய்வதற்கு முடியாதுள்ளது. அந்த நிலைமையை மாற்றியமைத்து, விவசாயிக ளின் விளைச்சலை கொள்வனவு செய்வதற்கும் முதல் முறையாக அரசால்முடிந்துள்ளது என்று ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ச தெரிவித்தார். (ம-4)

# போலியான கடவுச்சீட்டுடன் இளம்பெண் கைது

கொழும்பு, ஏப். 23

போலியான கடவுச்சீட்டைப் பயன்படுத்தி டுபாய் வழியாக இத்தாலிக்கு பயணிக்க இருந்தார் என்ற குற்றச்சாட்டில், இளம் பெண்ணொருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.



கல்பிட்டியைச் சேர்ந்த 21 வயதுடைய இளம் பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான நிலையத்தின் குடிவரவு மற்றும் குடியகல்வுத்துறை அதிகாரிகள் இவரைக் கைதுசெய்தனர்.

இவர் சமர்ப்பித்த ஆவணங்களை சந்தேகத்தின் பேரில் விமான நிலைய அதிகாரிகள் குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறையினரிடம் ஒப்படைத்தனர்.

அவரால் சமர்ப்பிக்கப்பட்ட கடவுச்சீட்டு மற்றும் இத்தாலி விசா என்பவை போலியானவை என்று தொழில்நுட்ப விசாரணையில் தெரிய வந்துள்ளது. அதனையடுத்து அவரால் உடைமையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த செல்லுபடியாகும் கடவுச்சீட்டும் கைப்பற்றப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

# ஆபத்தான பல பொருள்களுடன் இலங்கைக்குள் நுழைந்த கப்பல்

## முகவர் மீது சட்ட நடவடிக்கை

கொழும்பு, ஏப். 23

அணு மின் நிலையங்களில் பயன்படுத்தப்படும் யுரேனியம் உள்ளிட்ட ஆபத்தான பல கதிரியக்கப் பொருள்களைச் சுமந்த கப்பல் ஒன்று ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்குள் நுழைந்துள்ளது. இது தொடர்பில் கப்பலின் உள்ளூர் முகவர்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சூரிய சக்தி, காற்று மற்றும் நீர் மின்னுற்பத்தி கருத்திட்ட இராஜாங்க அமைச்சர் துமிந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

நெதர்லாந்திலிருந்து சீனாவுக்குச் செல்லும் கப்பல் தொழில்நுட்பச் சிக்கலால் நேற்றுமுன்தினம் ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்குள் நுழைந்தது.

இதன்போது அணுமின் நிலையங்களில் பயன்படுத் தப்படும் யுரேனியம் பங்குகள் உள்ளிட்ட ஆபத்தான சரக்குகள் குறித்த கப்பலில் ஏற்றப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்படவில்லை. இதுபோன்ற ஆபத்தான பொருள்களை நாட்டுக்குள் கொண்டு வருவதற்கு கப்பல் இயக்குநர்கள் அரசிடம் சிறப்பு அனுமதியைப் பெற வேண்டும். எனினும் அவ்வாறான அனுமதியை குறித்த கப்பல் உரிமையாளர்கள் பெறவில்லை. அதனால் கப்பலை உடனடியாக துறைமுகத்தி லி ருந்து வெளியேற்றுமாறு அணுசக்தி ஒழுங்கு படுத்தல் பேரவையின் பணிப்பாளர் நாயகம் எச்.எல். அனில் ரஞ்சித் அறிவித்துள்ளார். (ம-4)

# மதுப்போத்தல்களுக்கு பாதுகாப்பு 'ஸ்டிக்கர்'

கொழும்பு, ஏப். 23

உள்நாட்டில் தயாரிக்கப்படும் அனைத்து மதுபானப் போத்தல்களுக்கும், கியூ.ஆர். குறியீட்டை கொண்ட பாதுகாப்பு ஸ்டிக்கர் முத்திரைகளை ஒட்டும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஜூலை மாதம் முதலாம் திகதி தொடக்கம் அதன் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும் என்று மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. கியூ.ஆர் குறியீட்டைக் கொண்ட பாதுகாப்பு ஸ்டிக்கரின் துல்லியத்தை உறுதிப்படுத்த, பொதுமக்களுக்கு ஒரு சிறப்புக் கையடக்கத் தொலைபேசி பயன்பாடு மற்றும் குறுஞ்செய்தி சேவை வடிவமைக்கப்படும் என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-4)

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 04 . 1943



மறைவு 22 . 04 . 2021

### சிலம்பு கந்தசாமி

எழுதுமட்டுவாழ் தெற்கு, எழுதுமட்டுவாழைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிலம்பு கந்தசாமி அவர்கள் நேற்று (22.04.2021) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களர்ன சிலம்பு வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான சின்னன் பொன்னி தம்பதியரின் மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நடராசா, சிவயோகலிங்கம் ஆகியோரின் சகோதரரும், நாகவதனி (லண்டன்), நாகசுகந்தினி (காசாளர், யாழ்.மாவட்ட ப.தெ.வ.அ.கூ.ச சமாசம்), நாகசுபாஜன் (பொது முகாமையாளர், சாவகச்சேரி ப.தெ.வ.அ.கூ சங்கம்), நாகசுதீஸ்கரன் (ஆசிரியர்), நாகசுதர்சன், நாகசுதர்சினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பரராசசிங்கம் (லண்டன்), சற்குணராசா, மீனவேணி, நிசா, சுதேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், நிவேதிகா (லண்டன்), தனுராஜ், திரேகா,கேயன், ஹரிஸ், கிரிதா, சானுஜா, வனோஜன் (லண்டன்), றெனோஜன் (லண்டன்), தியா (லண்டன்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2021) வெள்ளிக்கிழமை மு.ப 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் எழுதுமட்டுவாழ் இராமியன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

எழுதுமட்டுவாழ் தெற்கு,
எழுதுமட்டுவாழ்.
077 892 5693.

தகவல்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை வடக்கு செயலகம் தரமிறக்கப்பட்டமை எதற்காக?

## தமிழர்கள் பெரும்பான்மையினர் என்பதால்தான் இந்த முடிவா என கஜேந்திரகுமார் கேள்வி!

**கொழும்பு, ஏப். 23**

**28ஆண்டுகளாக பிரதேச செயலகமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு செயற்பட்டு வந்த கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை உப பிரதேச செயலகமாக தரமிறக்கம் செய்ததை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அங்கு தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்வதால் இந்த அரசு இவ்வாறு செயற்படுகின்றதா? இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேள்வி எழுப்பினார்.**



நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்நாட்டு விவகார அமைச்சு கடந்த 8ஆம் திகதி அம்பாறை மாவட்டச் செயலருக்கு கடிதம் மூலம் ஒரு அறிவிப்பைச் செய்துள்ளது. கல்முனை வடக்கு பிரதேச செயலர் பணியகத்தை கல்முனை தெற்கு பிரதேச செயலர் பணியகத்தின் உப பணியகமாக கருதுமாறு அந்தக் கடித்தில் கேட்கப்பட்டுள்ளது. இன்னொரு வகையில் கூறுவதானால் இது கல்முனை வடக்கு பிரதேச செயலர் பணியகத்தை தரமிறக்கும் நடவடிக்கையாக அமைந்துள்ளது.

1993ஆம் ஆண்டு தனியான பிரதேச செயலர் பணியகமாக உருவாக்கப்பட்டிருந்த இது, தற்போது கல்முனை தெற்கு பிரதேச செயலர் பணியகத்தின் உப பணியகமாக தரமிறக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலகமாக உருவாக்கப்பட்டதிலிருந்து 8 பிரதேச செயலர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். பின்னர் கெடுவாய்ப்பாக அரசியல் தலையீடுகள் காரணமாக இந்தப் பணியகத்துக்கு பிரதேச செயலர்களுக்குப் பதிலாக உதவி பிரதேச செயலர்களே நியமிக்கப்பட்டுள்ளனர். இருந்த போதிலும் கல்முனை வடக்கு பிரதேச செயலர் பணியகம் அம்பாறை மாவட்டத்திலுள்ள 20 பிரதேச செயலர் பணியகங்களில் ஒன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு நாட்டிலுள்ள இதர பிரதேச செயலகங்கள் போன்று அதனை முறைப்படி தனியான பிரதேச செயலர் பணியகமாக அங்கீகரித்திருந்தது. இந்தப் பிரதேச செயலக ஆட்புல எல்லைக்குள் ஏறத்தாழ 43 ஆயிரம் மக்கள் வாழ்கின்றனர். 22 ஆயிரத்து 605 மக்கள் வாக்காளர்களாகப் பதிவு செய்துள்ளனர். 39 ஆயிரத்து 300 தமிழர்கள், 3 ஆயிரம் முஸ்லிம்கள், 125 சிங்களவர்கள் வாழ்கின்றனர். மாவட்ட அபிவிருத்தி குழுக்களும் இதனை தனியான பிரிவாகக் கணித்து வேறாகவே கூட்டங்களை நடத்திவருகின்றன. நடைமுறையில் இவ்வாறிருந்தாலும் அரசியற் காரணங்களால் கடந்த 28 வருடங்களாக இப்பணியகத்தின் உருவாக்கம் பற்றிய வர்த்தமானி அறிவித்தல் மேற்கொள்ளப்படவில்லை. இன்று அதனை காரணங்காட்டி இத் தரமிறக்கும் நடவடிக்கைகளை நியாயப்படுத்த முனைகிறார்கள். இது முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட முடியாத நடவடிக்கை.

இன்று இயங்கிவரும் பல பிரதேச செயலர் பணியகங்களின் உருவாக்கம் பற்றி வர்த்தமானி அறிவுறுத்தல்கள் மேற்கொள்ளப்படவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கோரளைப் பற்று மத்தி பிரதேச செயலர் பிரிவு 2002ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வந்தாலும் அது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு மேற்கொள்ளப்படவில்லை. வவுனியா தெற்கு பிரதேச செயலர் பிரிவு பற்றிய வர்த்தமானி அறிவித்தல் மேற்கொள்ளப்படவில்லை. அப்படியிருக்கும் நிலையில் கல்முனை வடக்கு பிரதேச செயலர் பிரிவு விடயத்தில் இப்பாகுபாடு காட்டப்படுவது ஏன்? இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்தப் பிரதேச செயலர் பிரிவின் ஆட்புல எல்லைக்குள் வாழ்பவர்கள் பெரும்பாலும் முழுமையாகவே தமிழர்கள் என்பதனால் இப்பாகுபாடு காட்டப்படுகிறதா? இதுதான் காரணமா? இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த அடிப்படையை உணர்ந்து உள்துறை செயலகத்தின் இராஜங்க அமைச்சர் சாமல் ராஜபக்சவின் கவனத்துக்கு கொண்டு வந்து ஏப்ரல் 8ஆம் திகதி அனுப்பிய கடிதத்தை மீளப்பெற்று கல்முனை வடக்கு பிரதேச செயலர் பிரிவை முறைப்படி வர்த்தமானி அறிவுறுத்தலைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பிரதேச செயலர் பணியகத்துக்கு அதற்குரிய அங்கீகாரத்தை வழங்கி பிரதேச செயலர் ஒருவரை நியமிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்- என்றார். (ஒ.5)

# ஏப். 21 தாக்குதலை அரசியலாக்காதீர்கள்

## நாமல் கோரிக்கை

கொழும்பு, ஏப். 23

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் எதிர்க்கட்சியினர் அரசை விமர்சித்துக் கொண்டிருக்காமல், தாக்குதல் தொடர்பில் யார் மீதாவது சந்தேகம் இருப்பின், பொலிஸில் முறையிடுமாறு தெரிவிக்கின்றோம். மாறாக இதனை அரசியலாக்க வேண்டாம் இவ்வாறு அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஏப்ரல் 21 தாக்குதலுடன் தொடர்புபட்டவர்கள் யாராக இருந்தாலும் தராதரம் பார்க்காமல் அவர்களுக்குத் தண்டனையைப் பெற்றுக்கொடுப்போம். கடந்த அரசு பொறுப்பற்ற முறையில் செயற்பட்டமையால்தான் இத்தாக்குதல் ஏற்பட்டது. தாக்குதலைத் தடுக்க முடியாமல் போனவர்கள் தற்போது எம்மீது குற்றம் சாட்டுகின்றனர். ஆனால் நாங்கள் அதனை வைத்துக் கொண்டு அரசியல் செய்யவில்லை. அது தொடர்பாக ஆணைக்குழு அமைத்து விசாரணை மேற்கொண்டுள்ளோம். என்றார். (ம-4)



# துறைமுக விவகாரத்தை திசைதிருப்பும் எதிர்த்தரப்பு

## கூறுகின்றார் டிலான்

கொழும்பு, ஏப். 23

கொழும்பு துறைமுக நகர விவகாரம் தொடர்பில் மக்கள் மத்தியில், தவறான நிலைப்பாட்டை தோற்றுவித்து அரசை நெருக்கடிக்குள் தள்ள எதிர்த்தரப்பினர் முயற்சிக்கின்றனர்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட வரைவு அரசமைப்புக்கு முரணானது அல்ல என்று சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளார். அதன் பின்னரே சட்டவரைவு நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்ட வரைவுக்கு எதிராக உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்ட வண்ணம் உள்ளன. அதற்கமைவாக உயர்நீதிமன்றம் எடுக்கும் தீர்மானத்தை முறையாகச் செயற்படுத்துவோம்.

அதேவேளை ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதலுக்கு நல்லாட்சி அரசின் அரசதலைவர்கள் மாத்திரமல்ல ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் அனைவரும் பொறுப்புக்கூற வேண்டும். விசாரணை நடவடிக்கைகள் அரசியல் தலையீடு இல்லாமல் முன்னெடுக்கப்படுகின்றன. குற்றவாளிகளை சட்டத்தின் முன்னிறுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (ம-4)

# தோட்ட மருத்துவமனைகள் படிப்படியாக அரசு வசமாகும்

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 23

தோட்ட மருத்துவமனைகள் தேவைகளுக்கேற்பவே, அரசால் கையகப்படுத்தப்படும். எனினும் அரச மருத்துவமனைகளுக்கு அண்மையில் உள்ள தோட்ட மருத்துவமனைகள் அரசின் கீழ் கொண்டுவரப்பட மாட்டாது என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

நாடாளுமன்றில் வாய்மூல விடைகளுக்கான வினாக்கள் நேரத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமாரின் கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டில் தற்போது 494 தோட்ட மருத்துவமனைகள் உள்ளன. அவற்றில் 44 மருத்துவமனைகள் அரசின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. தேவைக்கு ஏற்ப படிப்படியாக அரசின் கீழ் தோட்ட மருத்துவமனைகளைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தோட்ட மருத்துவமனைகளுக்கு முக்கியவத்துவமளித்து செய்யக்கூடிய அனைத்து சுகாதார வேலைத்திட்டங்களையும் அரசு முன்னெடுக்கும்- என்றார். (ம-4)

# கோத்தா அரசு மக்களை முட்டாள்களாக்குகிறது

## சீறுகிறது தேசிய புத்தஜீவிகள் அமைப்பு

கொழும்பு, ஏப். 23

மக்களை ஏமாற்றி முட்டாள்களாக்கி கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டவரைவை நிறைவேற்ற அரசு முயற்சிக்கின்றது. இந்தச் சட்ட வரைவின் பின்னால் ஏதோ ஒரு தரப்புக்கு பெரும் லாபம் வழங்குவதே நோக்கம். இவ்வாறு தேசிய புத்திஜீவிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அந்த அமைப்பு இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியது. இது தொடர்பில் அந்த அமைப்பின் பொருளாதார அபிவிருத்திப் பிரிவின் தலைவர் அனில் ஜயந்த மேலும் தெரிவித்ததாவது;

துறைமுக நகரை நிர்வகிப்பது தொடர்பில் அமைக்கப்படவுள்ள ஆணைக்குழுவுக்கு ஆயுள்கால வரையறைகள் எதுவுமில்லை. வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிப்பது, துறைமுக நகரிலுள்ள நிறுவனங்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது உள்ளிட்டவற்றை ஆணைக்குழுவே செய்யும் என்று கூறப்பட்டுள்ளது. சீனாவுக்கு இதனை வழங்கினால் அது தனது பொருளாதாரக் கொள்கையையே செயற்படுத்தும். கறுப்புப் பணம் சுத்திகரிக்கப்படும் தளமாகவே இது மாறும். நாடு பெரும் நெருக்கடியைச் சந்திக்கும். அரசு இந்த விடயத்தில் மக்களை ஏமாற்றி செயற்பட முனைகின்றது. மக்கள் விழித்துக்கொள்ள வேண்டும்- என்றார். (ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபையை பாதுகாக்க ஒன்றிணைவு மிக அவசியம்

## தமிழ்க் கட்சிகளை வலியுறுத்துகிறது ரெலோ

**யாழ்ப்பாணம், ஏப். 23**

**தமிழ்க் கட்சிகள் தேர்தல் அரசியலையும், தமக்குள் இருக்கும் கொள்கை முரண்பாடுகளையும் கடந்து, மாகாணசபையைப் பாதுகாக்க ஒன்றிணைய வேண்டும் என்று ரெலோ அமைப்பு வலிறுயுத்தியுள்ளது.**

இது தொடர்பில் அந்த அமைப்பு அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது;

தற்போதைய அரசியல் சூழலில் மாகாணசபைத் தேர்தல் நடக்குமா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. ஏதேதோ காரணங்கள் சொல்லி அரசால் தேர்தல் பிற்போடப்பட்டு வருகிறது.

குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணசபைகளுக்கான தேர்தல் தொடர்ந்தும் பிற்போடப்படுவதால் மாகாண சபை முறைமை செயலிழந்துள்ளது. கடந்த ஆட்சியில் இருந்து இது தொடர்கிறது.

இதனால் மாகாண சபை முறைமை அவசியமற்றது என்று கருத்துக்கூற அரச தரப்பில் பலர் முன்வந்துள்ளனர். வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் ஆபத்தான கட்டத்தை எதிர் நோக்கி இருக்கிறார்கள்.

எமது பூர்வீக தாயகப் பரப்பில் காணி நிலங்கள் அபகரிக்கப்பட்டு அபிவிருத்தி என்ற பெயரிலும் தொல்லியல் என்ற பெயரிலும் குடியேற்றங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. தேர்தல் முறைமைகளில் மாற்றம் கொண்டுவருவதாகக் கூறி அரசு சட்டச் சிக்கலை முன்வைத்து மாகாணசபைத் தேர்தலை மேலும் பின்னடித்து செல்கிறது.

மாகாண சபை முறைமையை அரசியல் யாப்பில் இருந்து நீக்கி விட வேண்டும் என்ற முழுவீச்சோடு பேரினவாத சக்திகள் முயற்சி செய்து வருகின்றன.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக கொண்டுவரப்பட்டதால் இந்தியாவினுடைய நேரடி அழுத்தத்தின் காரணமாக 13ஆம் திருத்தம் காப்பாற்றப்பட்டு வருகிறது. இந்தியாவை பகைத்துக்கொள்ள விரும்பாமல் அல்லது முடியாமல், அதேநேரம் தமது முயற்சியும் கைகூடாமல் அரசு கைகட்டி நிற்கிறது. இழுத்தடிப்பு செய்தாவது மாகாண சபை முறைமையை நடைமுறைப்படுத்தாமல் காலம் தாழ்த்துவதன் மூலம் பயனற்றுப் போக வைக்கும் செயலாகவே இதை நாம் கருதுகிறோம்.

தமிழ்க் கட்சிகள், தேர்தல் அரசியலையும், தமக்குள் இருக்கும் கொள்கை முரண்பாடுகளையும் கடந்து இந்த விடயத்தை முன்னெடுக்க ஒன்றிணைந்து செயல்படுவது தற்போதைய காலத்தின் அவசியம் என்பதில் எவருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது -என்றுள்ளது. (ம-ஐ)

# கல்விக் கருத்தரங்கு நாளைமறுதினம்

யாழ்ப்பாணம், ஏப். 23

யாழ்ப்பாண மருத்துவ சங்கம் நடத்தும் 'தற்போதைய சூழலில் எங்கள் குழந்தைகளுக்கு சரியான ஊட்டச்சத்தின் முக்கியத்துவம்' என்பது குறித்த கல்விக் கருத்தரங்கு எதிர்வரும் 25ஆம் மற்றும் 26ஆம் திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை நடைபெறவுள்ளது என மாகாண சுகாதார பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இக்கருத்தரங்கில் குடும்ப நல உத்தியோகத்தர்கள் மற்றும் மேற்பார்வை குடும்ப நல உத்தியோகத்தர்கள் அனைவரையும் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-20)



# சிறுபோக நெற்செய்கைக்காக வவுனிக்குளத்தின் நீர் திறப்பு

முல்லைத்தீவு, ஏப். 23

முல்லைத்தீவு மாவட்டத்தின் வவுனிக்குளத்தின் நீர் சிறுபோக நெற்செய்கைக்காக கடந்த திங்கட்கிழமை திறந்து விடப்பட்டது.

கடந்த 7ஆம் திகதி முல்லைத்தீவு மேலதிக மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் தலைமையில் வவுனிக் குளத்துக்கான சிறுபோக நெற்செய்கைக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத் தீர்மானத்துக்கு அமைவாக சமய வழிபாடுகளுடன் குளத்தின் நீர் திறந்துவிடும் நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் ந.சுதாகரன் மற்றும் வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் கை.பிரகாஸ் ஆகியோர் இணைந்து குளத்தின் நீரை திறந்து வைத்தனர். வவுனிக்குளத்தின் கீழ் 2 ஆயிரத்து 754 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. (ஐ-13)

கடமைக்கு இடையூறு விளைவிப்பு;

# எச்சரிக்கையின் பின்னர் தம்பதியினர் பிணையில் விடுவிப்பு

சாவகச்சேரி, ஏப். 23

பொலிஸாரைக் கடமை செய்ய விடாமல் தடுத்த கணவனும், மனைவியும் நீதிமன்றால் எச்சரிக்கை செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் மந்துவில் பகுதியில் இடம்பெற்றது.

சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்ற டிப்பரை பொலிஸார் துரத்திச் சென்றுள்ளனர். சாரதி டிப்பர் வாகனத்தின் பெட்டியை உயர்த்தி மணலை வீதியில் கொட்டியவண்ணம் சென்றுள்ளார். பொலிஸார் பின்தொடர்வதைக் கண்ட சாரதி வாகனத்தை அதன் உரிமையாளரின் வீட்டில் விட்டுவிட்டு தப்பியோடியுள்ளார்.

வாகனத்தை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டுவர முயற்சித்த வேளையில் வாகனத்தின் உரிமையாளரும், அவரது மனைவியும் வாகனத்தை வெளியே எடுக்கவிடாமல் வாகனத்தின் முன்னால் படுத்துள்ளனர். இதனால் இருவரையும் கைதுசெய்த பொலிஸார் கடமைக்கு இடையூறு விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டுடன் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர்.

வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இருவரையும் எச்சரிக்கை செய்து தலா இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டது. (ஐ-9)

பாதுகாப்பற்ற

# ரயில் கடவையில் விபத்து நபரொருவருக்கு படுகாயம்

வவுனியா திருநாவற்குளம் பகுதியில் பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஏ9 வீதியில் இருந்து திருநாவற்குளம் பகுதிநோக்கி மோட்டார் சைக்கிளில் சென்ற நபரை, யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த கடுகதி ரயில் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது. விபத்தில் தூக்கிவீசப்பட்ட அவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-110)

# விவேக்கின் நினைவாக 10,000 மரக்கன்றுகள்!

மறைந்த நடிகரும் சமூகப் பற்றாளருமான விவேக்கை நினைவு கூரும் முகமாக கிளிநொச்சி மாவட்டத்தில் 10 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் பணிகளை அகில இலங்கை தமிழ் இளைஞர் பேரவை முன்னெடுத்துள்ளது.

அதன் முதற்கட்டமாக பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள், இளைஞர் தொழிற்பயிற்சி மையங்கள் மற்றும் பொலிஸ் நிலையம் ஆகியவை உள்ளிட்ட பொது இடங்களில் 200க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. (ச-6-18-20)

பாதுகாப்பற்ற ரயில் கடவை விவகாரம்

# 10 மணித்தியாலங்களுக்குள் தீர்வில்லையேல் போராட்டம்!

## திருநாவற்குளம் மக்கள் காலக்கெடு

வவுனியா, ஏப். 23

திருநாவற்குளம் பகுதியில் பாதுகாப்பற்ற ரயில் கடவைக்கு எதிர்வரும் 10 மணித்தியாலங்களில் பாதுகாப்பு ஊழியர் ஒருவரை நியமிக்கத்தவறின், வீதியில் இறங்கி போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று கிராமமக்கள் தெரிவித்தனர்.

நேற்றுக்காலை குறித்த கடவையில் இடம்பெற்ற ரயில் விபத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொதுமக்கள் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

திருநாவற்குளம் பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையில் பணியில் ஈடுபட்டு வந்த காவலாளிக்கு பொலிஸாரால் வழங்கப்படும் கொடுப்பனவு வழங்கப்படாத நிலையில் அவர் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதத்தில் இருந்து பணியில் ஈடுபடுவதை நிறுத்தியுள்ளார். தற்போது பல மாதங்களாக குறித்த கடவைக்கு பாதுகாப்பு ஊழியர் ஒருவர் நியமிக்கப்படவில்லை.

குறித்த கடவை நகரை அண்டி இருக்கின்றது. தினமும் அதிகமான மக்கள் அதனைப் பயன்படுத்தி வருவதுடன், ரயில் வருவதை இலகுவில் அறிந்துகொள்ளமுடியாத அபாயகரமான ஒரு பகுதியாக அது இருக்கின்றது.

குறித்த பாதுகாப்பற்ற கடவைக்கு ஊழியர் ஒருவரை நியமிக்குமாறு நாம் பலமுறை கோரிக்கை விடுத்தும் அது பொலிஸாராலும், ரயில் திணைக்களத்தாலும் நிறைவேற்றப்படாமல் தட்டிக்கழிக்கப்பட்டு வருகின்றது.

எனவே இன்று காலையில் (நேற்று) இருந்து பத்து மணித்தியாலங்கள் கால அவகாசத்தை நாம் பொலிஸாருக்கு வழங்குகின்றோம். அதற்குள் குறித்த கடவைக்கு பாதுகாப்பு ஊழியர் ஒருவர் நியமிக்கப்படாது விடின் பொதுமக்கள் அனைவரும் வீதியில் இறங்கி போராட்டத்தில் ஈடுபடுவோம் -என்றனர். (ஐ-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏப்ரல் 21 தாக்குதல்

# விசாரணைகளை மறைக்க முயற்சி

## முஜிபுர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 23

**ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பான விசாரணைகளை மறைப்பதற்கு அரசு பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது. ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி பாணந்துறையில் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். அந்த நபரிடம் மேற்கொண்ட விசாரணைகளில் பல தகவல்கள் வெளிவந்தன. குறித்த நபர் சஹ்ரான் மற்றும் நௌபர் மௌலவியுடன் நீண்டகாலம் தொடர்பு வைத்திருப்பது தொடர்பான தகவல்கள் பயங்கரவாத விசாரணைப்பிரிவால் நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்று வெற்றிபெற்ற பின்னர் இந்த விசாரணையை மேற்கொண்ட புலனாய்வுப்பிரிவு மற்றும் குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகள் இடமாற்றப்பட்டனர். அதனால் குறித்த நபர் தொடர்பில் எந்த விசாரணையும் இடம்பெறவில்லை. பீ அறிக்கை கூட நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. ஆனால் 2020ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 18ஆம் திகதி சட்டமா அதிபர் குற்ற விசாரணைப் பிரிவுக்குக் கடிதம் ஒன்றை எழுதி அதில், குறித்த நபர் தொடர்பில் தொடர்ந்தும் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள எந்தத் தகவலும் இல்லை; அதனால் அவரை விடுதலை செய்யுங்கள் எனத் தெரிவித்துள்ளார்.

இந்த நபர் இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவுடன் செயற்பட்டார் என்று ஏற்றுக் கொண்டுள்ளார். அதேநேரம் இவர் சஹ்ரானின் குழுவுடன் தொடர்புபட்டிருந்ததை புலனாய்வுப்பிரிவினரும் கண்டுபிடித்துள்ளனர். அவ்வாறானவரை சட்டமா அதிபரின் கோரிக்கைக்கமைய விடுதலை செய்துள்ளனர்.

ஆனால் எந்தக் குற்றச்சாட்டுக்களும் இல்லாத பலர் இன்று வருடக்கணக்கில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அரசு இந்த விசாரணையை மறைப்பதற்கு பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. ஏனெனில் இந்த விசாரணைகள் தொடரும்போது பல உண்மைகள் வெளிவரும் என்று அச்சப்படுகின்றார்கள். -என்றார். (ம-4)

## 'ஆடற்கதை' நூல் வெளியீடு

வவுனியா, ஏப். 23

வவுனியா பிரதேச கலாசார உத்தியோகத்தரும் கவிஞருமான, வீரசிங்கம் பிரதீபனின் நாட்டிய நாடகங்கள் அடங்கிய 'ஆடற்கதை' நூல் வெளியீட்டு நிகழ்வு நாளைமறுதினம் 25ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நிருத்தியவாணி சூரிய யாழினி வீரசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், முதன்மை விருந்தினராக வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன் கலந்துகொள்ளவுள்ளார். நூலுக்கான நயவுரையை தமிழருவி த.சிவகுமாரன் வழங்கவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-110)

## மதுபோதையில் சாரத்தியம்: மூவருக்கு ரூ.75,000 தண்டம்

சாவகச்சேரி, ஏப். 23



மதுபோதையில் வாகனம் செலுத்திய மூவருக்கு சாவகச்சேரி நீதிமன்று தலா 25 ஆயிரம் ரூபா வீதம் மொத்தமாக 75 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது. அத்துடன் 40 மணித்தியாலத்துக்கு அவர்களை சமூகப் பணியில் ஈடுபடுத்துமாறும் உத்தரவிட்டுள்ளது.

கொடிகாமம் பொலிஸாரால் மதுபோதையில் வாகனம் செலுத்தினர் என்ற குற்றச்சாட்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

அதன்போது வாகனம் செலுத்தியோர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்தே மேற்படி தண்டமும், சமூகப் பணி உத்தரவும் விதிக்கப்பட்டது. (ம-ச-9)

## கைதடி மக்களுக்கு முருங்கை கன்றுகள்

கொடிகாமம், ஏப். 23

'ஆரோக்கியமான எதிர்காலம்' மற்றும் 'நாட்டில் உள்ள அனைவருக்கும் முருங்கை மரத்தின் பயன்கள்' என்ற திட்டத்தின் கீழ் முருங்கைக் கன்றுகள் வழங்கும் நிகழ்வு கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் பெரும்போக உத்தியோகத்தர் வி.வகீஸ்வரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களப் பிரதி ஆணையாளர் இ.நிசாந்தன் கலந்துகொண்டு முருங்கை மரக்கன்றுகளை வழங்கினார்.

கர்ப்பிணித் தாய்மார்கள், மகளிர் கமக்கார அமைப்பின் அங்கத்தவர்கள் மற்றும் கமக்கார அமைப்பின் அங்கத்தவர்கள் ஆகியோருக்கு முதற்கட்டமாக 300 முருங்கைக் கன்றுகள் வழங்கப்பட்டன. (ச-159)

## சாரதிகளைக் கண்காணிக்க உபகரணங்கள் கொள்வனவு

கொழும்பு, ஏப். 23

போதைப்பொருள்களைப் பயன்படுத்திவிட்டு வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளை கண்காணிக்கும் விசேட வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்குரிய உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து கொள்வனவு செய்யப்படவுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளைக் கண்டறிவதற்குரிய உபகரணங்கள் போதுமான அளவு பொலிஸாரிடம் உள்ளன. ஆனால் போதைப்பொருள்களைப் பயன்படுத்திவிட்டு சாரத்தியம் செய்பவர்களைக் கண்டறிவதற்குரிய உபகரணங்கள் மற்றும் வசதிகள் போதுமான அளவு இல்லை. அதனை வெளிநாடுகளிலிருந்து கொள்வனவு செய்யவுள்ளோம். போதைப்பொருள்களைப் பயன்படுத்திய நிலையில் சாரத்தியம் செய்பவர்கள் கண்டறியப்பட்டால் 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்படும். அவர்களது சாரதி அனுமதிப் பத்திரத்தையும் செயலிழக்கச் செய்ய அல்லது இரத்துச் செய்ய முடியும். -என்றார். (ஒ-இ)



## பற்றைகள் நிரம்பிய வீதியை சீரமைத்துத் தருமாறு கோரிக்கை

கிளிநொச்சி, ஏப். 23

கிளிநொச்சி கரைச்சியின், வன்னேரிக்குளம் கிராமத்துக்கும் பூநகரியின் முக்கொம்பன் கிராமத்துக்கும் இடைப்பட்ட வீதியை சீரமைத்துத் தருமாறு இரு கிராமங்களையும் சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

1990ஆம் ஆண்டுக்கு முன்னர் வன்னேரிக்குளம் கிராமத்தில் இருந்து முக்கொம்பன் வழியாக பூநகரிக்குச் செல்லக்கூடிய 5 கிலோமீற்றர் நீளமான வீதி ஒன்று காணப்பட்டது. வன்னேரிக்குளத்தின் குஞ்சுக்குளம் கிராம மக்கள் உவர்ப் பரம்பல் காரணமாக முழுமையாக இடம்பெயர்ந்தனர். இதனால் குறித்த வீதியின் பாவனை குறைவடைந்ததுடன் போர் நடைபெற்ற காலங்களில் குறித்த வீதி முழுமையாக மக்கள் பாவனையின்றிக் காணப்பட்டதுடன், தற்போது வீதியின் இருபுறமும் பற்றைகள் வளர்ந்து வீதியே மறைக்கப்பட்ட நிலையில் காணப்படுகிறது.

குறித்த ஐந்து கிலோமீற்றர் நீளமான வீதி சீரமைக்கப்படுமானால் வன்னேரிக்குளம் கிராமத்தில் வாழ்கின்ற 500 வரையான குடும்பங்களும், முக்கொம்பன் கிராமத்தில் வாழ்கின்ற 600 வரையான குடும்பங்களும் இலகுவாக போக்குவரத்தில் ஈடுபட முடியும்.

வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்துக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து வருகை தருகின்ற ஆசிரியர்கள் அக்கராயனுக்குச் செல்லாது முக்கொம்பன் வழியாகவே வன்னேரிக்குளத்தைச் சென்றடைய முடியும். வன்னேரிக்குளத்தின் உற்பத்திப் பொருள்களை சாவகச்சேரி மற்றும் யாழ்ப்பாணத்துக்கு இலகுவாக எடுத்துச் செல்ல முடியும். கடந்த பத்தாண்டுகளில் கிளிநொச்சி மாவட்டச் செயலகம் மற்றும் கரைச்சி பிரதேச செயலகம் என்பவற்றில் இவ்வீதியின் சீரமைப்புத் தொடர்பாக ஆராயப்பட்டாலும் இறுதி முடிவுகள் இதுவரை எடுக்கப்படவில்லை -என்றனர். (ஐ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிமெந்துத் தொழிற்சாலையின்

# 100 கோடி பெறுமதியான இரும்புகளில் மோசடியா?

### விளக்குகின்றார் சிவசிறி

யாழ்ப்பாணம், ஏப். 23

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் சுமார் 100 கோடி ரூபா பெறுமதியான இரும்புகளை தென்னிலங்கைச் சேர்ந்தவர்களுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன என காங்கேசன்துறை லங்கா சிமெண்ட் தொழிற்சாலையின் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் பொன்னையா விமலநாதன் குற்றஞ்சாட்டியிருந்த நிலையில், மேற்படி தகவல் உண்மைக்குப் புறம்பானது என்று தெல்லிப்பழை பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ தெரிவித்துள்ளார்.

திறந்த விலை மனுக்கோரல் இன்றி சிமெந்துத் தொழிற்சாலையின் இரும்புகளை தெற்கைச் சேர்ந்தவர்களுக்கு விற்பனை செய்யும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. தெல்லிப்பழை பிரதேச செயலரும் இதற்கு உடந்தையாக உள்ளார் என்று மேற்படி பொறுப்பு வாய்ந்த அலுவலர் குற்றஞ்சாட்டியிருந்த நிலையில், இதற்கு பிரதேச செயலர் ஓர் ஊடக அறிக்கையை அனுப்பி வைத்துள்ளார்.

அந்த அறிக்கையில் உள்ளதாவது:

சிமெந்து தொழிற்சாலையில் 100 கோடி பெறுமதியான இரும்புகளில் மோசடி என்று பிரசுரமாகிய செய்தியில் தெரிவிக்கப்பட்ட விடயம் உண்மைக்குப் புறம்பானது. குறித்த நடவடிக்கைகள் யாவும் கைத்தொழில் அமைச்சால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்துக்கு அமைவாகவும், அமைச்சரவை விஞ்ஞாப னத்தின் மீதான நிதி அமைச்சரின் அவதானிப்புக்கு அமைவாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, குறித்த நடவடிக்கைகளுக்கும் எமது பிரதேச செயலகத்துக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதனைத் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். அத்துடன் சிமெந்து தொழிற்சாலை கட்டடம் தொடர்பாகவோ அல்லது சிமெந்து தொழிற்சாலையின் இரும்பு தொடர்பாகவோ பிரதேச செயலகத்தால் எந்த அமைச்சுக்களுடனும் எவ்வித தொடர்பாடல்களும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும் அறியத்தருகின்றேன் - என்றுள்ளது. (ம)

## தங்கச் சங்கிலிகள் கொள்ளை; சந்தேகநபர்கள் 13 பேர் கைது

கொழும்பு, ஏப். 23

தங்கச்சங்கிலிகள் கொள்ளை தொடர்பில், கடந்த இரண்டு வாரத்தில் 13 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். நாட்டில் தங்கச் சங்கிலிகள் கொள்ளையிடும் சம்பவங்கள் மீண்டும் அதிகரித்துள்ளன. கடந்த செவ்வாய்க்கிழமை மட்டும் நான்கு கொள்ளைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதனால் பெரும்பாலும் பெண்களே பாதிக்கப்பட்டுள்ளனர். போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் மற்றும் திட்டமிட்ட குற்றச் செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்கள் போன்றோரே இது போன்ற கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடுகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார். (ம-4)

## பச்சிலைப்பள்ளி பிரதேசசபை - பளை

**இயக்கச்சி வளாக கடைகள் நீண்டகால குத்தகைக்கு வழங்குதல் மற்றும் கோழி இறைச்சிக்கடைகளை 15.05.2021 தொடக்கம் 31.12.2021 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான**

**கேள்வி அறிவித்தல் -2021**

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 23.04.2021 தொடக்கம் 07.05.2021 பிற்பகல் 2 மணிவரை (அலுவலக நேரம்)
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 07.05.2021 பிற்பகல் 2 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 07.05.2021 பிற்பகல் 2 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம்

இயக்கச்சி கடைக்கான கேள்வி அட்டவணை.

| இல | கடை இலக்கம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கப்பட கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| 1. | VS-03 | 75,000.00 | 7500.00 | 2000.00 |
| 2. | VS-04 | 75,000.00 | 7500.00 | 2000.00 |
| 3. | PS-04 | 150,000.00 | 15000.00 | 2000.00 |
| 4. | PS-09 | 105,000.00 | 10500.00 | 2000.00 |
| 5. | PS-10 | 105,000.00 | 10500.00 | 2000.00 |
| 6. | PS-11 | 96,000.00 | 9600.00 | 2000.00 |
| 7. | PS-12 | 96,000.00 | 9600.00 | 2000.00 |
| 8. | PS-13 | 96,000.00 | 9600.00 | 2000.00 |

கோழி இறைச்சிக்கடைகள்

| இல | கடை இலக்கம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கப்பட கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| 01. | புலோப்பளை கோழி இறைச்சிக்கடை | 458,450.00 | 9200.00 | 2000.00 |
| 02. | முள்ளிப்பற்று கோழி இறைச்சிக்கடை | 42,300.00 | 5000.00 | 2000.00 |

**நியந்தனைகள் :-**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமூகமளிக்கவேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை பளை"** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பபடல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **"பிரந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி "** என்ற முகவரிக்கு 07.05.2021 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
04. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.
05. நீண்டகால கடைகளுக்கு மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்த வேண்டும் குறித்த மாத வாடகைப்பணத்தினை அடுத்த மாதம் 05 ஆம் திகதிக்குள் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளவேண்டும் தவறும் பட்சத்தில் அதற்கான மாதக்கட்டணத்துடன் மாதாந்தக் கட்டணத்தின் 10% தண்டமாக அறவிடப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும். டிசம்பர் மாதத்திற்குரிய வாடகை பணத்தினை டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தவேண்டும்.
06. நீண்டகால கடைகளுக்கு கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித் தொகையினை முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகொள்ளவேண்டும்.
07. சித்திகரகுத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
08. நீண்டகால கடைகளுக்கு சித்திகர குத்தகைதாரர் பாதுகாப்பு வைப்புபணமாக 03 மாத கால வாடகை தொகையினை முற்பணமாக செலுத்த வேண்டும்.
09 VS-03 ,VS-04 ஆகிய கடைகள் மரக்கறி வியாபாரத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.
10. இறைச்சிக் கடைகளுக்கான கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித் தொகை 300,000.00 ரூபாவிற்கு உட்பட்ட தொகையாயின் கேள்வித்தொகையின் 1 / 2 பகுதியையும், 300,000.00 ரூபாவிற்கு மேற்பட்ட தொகையாயின் 1 / 3 பகுதியையும் செலுத்தி சபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகொள்ளவேண்டும். மிகுதி தொகையினை 04 பகுதியாக பிரித்து ஒவ்வொரு மாதக்கட்டணமாக அடுத்தமாதம் 10ம் திகதிக்கு முன்னர் செலுத்தல் வேண்டும். தவறின் 10% தண்டப்பணமாக அறவிடப்படும்.
11. இறைச்சிக்கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாதவாடகையினை கேள்வித்தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.
12. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
13. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளர் / செயலாளருக்கு உண்டு.
14. [illegible] பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**சுப்பிரமணியம் சுரேன்.**
**தவிசாளர்**
**பச்சிலைப்பள்ளி பிரதேசசபை - பளை**
**23.04.2021**

# தொழில் துறைகளுக்கு ரஷ்யாவே அடித்தளம்

### சபாநாயகர் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.23

இலங்கை பெரும் எண்ணிக்கையான பொருள்களை ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்துள்ளது. மறுபக்கத்தில் ரஷ்யாவுக்கு பெறுமதிமிக்க இறக்குமதியாளராக உள்ளது. அதேநேரம் இலங்கையின் தேயிலையை நீண்டகாலம் பெருமளவில் கொள்வனவு செய்த நாடாகவும் ரஷ்யா காணப்படுகின்றது. இவ்வாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார். இலங்கை - ரஷ்ய நாடாளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பான ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இலங்கை தனது தொழிற்றுறைக்கான அடித்தளத்தை இடுவதற்கு உதவி வழங்கிய முதன்மையான நாடுகளில் ரஷ்யாவும் ஒன்றாகும். சிலோன் ஸ்டீல் கோப்பரேஷன், சிலோன் டயர் கோப்பரேஷன் மற்றும் சிலோன் சீனி கூட்டுத்தாபனம் ஆகிய மூன்று தொழிற்றுறைத் திட்டங்களும் அந்த நாட்டின் உதவியுடனேயே இலங்கையில் நிறுவப்பட்டன என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார் என்றுள்ளது (ப-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் முதலிடுங்கள்

## போவோ நாடுகளுக்கு அழைப்பு

கொழும்பு,ஏப்.22
இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு முதலீட்டாளர்கள் முன்வர வேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச போவோ மன்ற உறுப்பு நாடுகளிடம் வேண்டுகோள் விடுத்தார்.
சீனாவின் ஹைனேன்ஹி போவோ நகரத்தில் நடைபெறும், போவோ மாநாட்டில், வீடியோ தொழிநுட்பத்தின் ஊடாகப் பங்குபற்றிய ஜனாதிபதி இந்தக் கோரிக்கையை விடுத்தார் என்று அவரது ஊடகப் பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் ஏற்றுமதியை இலக்காகக்கொண்ட முதலீட்டு வாய்ப்புக்களை விரிவுபடுத்துவது அரசின் நோக்கமாகும். அதற்காக முதலீடுகளை மேற்கொள்வதற்கு முதலீட்டாளர்களை ஊக்குவிக்குமாறு ஜனாதிபதி, ஏனைய நாடுகளிடம் கோரிக்கை விடுத்தார். சாதகமான வரி அமைப்பு மற்றும் ஏனைய சலுகைகள் உள்ளிட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகளுக்கு கவர்ச்சிகரமான கொள்கையை நாட்டில் நாம் உருவாக்கி வருகின்றோம். இந்த இலக்கை அடைந்து கொள்வதற்கு சர்வதேச பங்காளர்களின் ஆதரவை எதிர்பார்க்கின்றோம் என்றும் ஜனாதிபதி அழைப்பு விடுத்தார் என்றுள்ளது. (ப-4)

## 31வது நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்



**திரு. தில்லைநாதன் கிருஷ்ணமூர்த்தி**
(ஓய்வு பெற்ற அங்கீகரிக்கப்பட்ட நில அளவையாளர்)

எங்கள் அன்பிற்கும் பாசத்திற்கும் உரியவராக விளங்கிய தில்லைநாதன் கிருஷ்ணமூர்த்தி யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நாட்களில் அவரை இரவு பகலாக அயராது சிகிச்சை அளித்து வந்த வைத்திய அதிகாரிகள், வைத்திய நிபுணர்கள், தாதிமார்கள் ஏனைய உதவியாளர்கள் அனைவருக்கும் முதற்கண் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அவரின் மரணச் செய்தி கேட்டு உடன்வந்து அனுதாபங்களையும் ஆறுதலையும் தெரிவித்துள்ளோருக்கும், தொலைபேசி மூலம் தங்கள் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துள்ளோருக்கும், யாழ் இந்துக்கல்லூரி O.B.A யாழ், கொழும்பு அங்கத்தவர்களின் அனுதாபங்களை மலர் வளையங்கள் மூலம் தெரிவித்த அனைவருக்கும், இறுதி ஊர்வலத்தில் பங்கு கொண்ட அனைத்து உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
இன்று (2021.04.23) வெள்ளிக்கிழமை அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள் யாழ். வில்லூன்றி புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று, வீட்டுக்கிருத்திய கிரியைகள் இல .7 சிவப்பிரகாசம் வீதியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் ஆத்ம சாந்தி பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மதியபோசன விருந்து உப சாரங்களில் பங்கு பற்றி சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**இல.7, சிவப்பிரகாசம் வீதி,**
**வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்**

**குடும்பத்தினர்**

## 1st Death Anniversary



**Dr. (Mrs.) Senkamalam Theivendran**

Date of Birth : 17.09.1939
Date of Death : 23.04.2020

You will forever remain alive in our hearts and memories.

*Family members*

## சிறுமியைக் காணவில்லை

அம்பாறை, ஏப். 23
திருக்கோவில் விநாயகபுரத்தைச் சேர்ந்த 15 வயதுச் சிறுமி ஒருவர் காணாமல் போயுள்ளார். கடந்த செவ்வாய்க்கிழமை பாடசாலைக்குச் சென்ற சிறுமி அன்று இரவு வரை வீடு திரும்பவில்லை என்று உறவினர்கள் பொலிஸாரிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.
குறித்த சிறுமி பாடசாலைக்குச் செல்லும் போது புத்தகப்பையில் உடைகளையும் எடுத்துச் சென்றுள்ளார் என்று பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (ம-4)

## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் -17 பலாலி வீதி ஆதன இல 54.58 என்ற வரிமதிப்பீட்டு இலக்கங்களைக் கொண்ட ஆதனங்கள் K.வைத்திலிங்கம் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு அ.அருள்செல்வன் முகதாவில் நிறைவேறிய 98ம் இலக்க 27.07.2020ம் திகதிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் சண்முகம் வேலாயுதமும் பெண் கலாநிதியும் தம்முடையது என வெளிப்படுத்தியுள்ளனர்.

**ஆதன விபரம்:-**
வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று யாழ்ப்பாணம் மாநகர சபை யாழ்ப்பாணம் பிரதேச செயலகம் கிராம அலுவலர்பிரிவு சிறாம்பியடி J/79 வண்ணார்பண்ணை தென்கிழக்கு இறை "இலகடி மக்கிக் கிடங்கு" நிலப்பரப்பு 2 ஆனால் ஆட்சிப்படியும் அளவின்படியும் நிலப்பரப்பு 1 குளி 14.09. வீடும் கடைக்கட்டடமும் அரைவாசிக் கிணறும் அதற்குரியவைகளும் இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் K.பரமேஸ்வரன் அவர்களால் 23.03.2019திகதியில் 3884/2019ம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட படத்தில் துண்டு 1 என சுட்டப்பட்டுள்ளது.

**இதற்கெல்லை**
**கிழக்கு** :- தேவராஜா பெண் பிறேமலதாவின் ஆதனம்.
**வடக்கு** :- விக்கினேஸ்வரன் மகள் விஜிதாவின் ஆதனம்.
**மேற்கு** :- பலாலி வீதி
**தெற்கு** :- அரியரட்ணம் பெண் வனிதா காந்தியின் ஆதனம்.
இதனடங்கலும்.

தற்போது சண்முகம் வேலாயுதம் பெண் கலாநிதி இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின், பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களு டன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சண்முகம் வேலாயுதம் பெண் கலாநிதி என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப் பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர் மாநகரசபை**
**யாழ்ப்பாணம்.**

உ
சிவமயம்

## தசாக கிருஹயக்ஞ அழைப்பு



சார்வரி வருடம் பங்குனிமாதம்
26 ஆம் நாள் (08.04.2021)
வியாழக்கிழமை
அபரபட்ச த்வாதசி திதியில்
சிவபதமடைந்த
எங்கள் அன்பு அம்மா

**ஸ்வர்கஸ்ரீ. ஸ்ரீமதி. லக்ஷ்மிகாந்தம் ஐயர் காயத்ரிதேவி**
அவர்களின்
ஆத்ம சாந்தி கிரியைகள் கீழ்வரும் தினங்களில் நடைபெறும்

- **தசாகம்** - 23.04.2021 (வெள்ளிக்கிழமை) காலை : 10.00 மணி
- **ஏகோதிஷ்டம், மாசியம்** - 24.04.2021 (சனிக்கிழமை) காலை : 10.00 மணி
- **சபிண்டீகரணம்** - 25.04.2021 (ஞாயிற்றுக்கிழமை) காலை : 10.00 மணி
- **கிரஹயக்ஞம்** - 26.04.2021 (திங்கட்கிழமை) மதியம் : 12.00 மணி

மேற்படி தினங்களில் வந்து கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தனை செய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**சிவஞானம்பிள்ளையார் கோயிலடி,**
**மானிப்பாய் வீதி, உடுவில்.**

**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் தீர்மானத்தை சவாலுக்கு உட்படுத்துவதற்கு விரும்பவில்லை

## மைத்திரி பின்வாங்கல்

**கொழும்பு, ஏப். 23**

**மே தின நிகழ்வுகளுக்கு தடை விதித்து அரசால் அறிவிக்கப்பட்டுள்ள தீர்மானத்தை நாம் சவாலுக்கு உட்படுத்தப் போவதில்லை என்று முன்னாள் ஜனாதிபதியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பங்காளிக் கட்சிகளுடனான கலந்துரையாடலின் பின்னர் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டத்தில் மே தின நிகழ்வை நாம் தனியே நடத்துவது என்று அறிவித்திருந்தோம். ஆனால், மே தின நிகழ்வுகளுக்கு அனுமதியில்லை என்று அரசு அறிவித்துள்ளது. ஜனாதிபதியின் மேற்பார்வையில் இயங்கும் கொரோனாத் தடுப்புச் செயலணியே இந்த அறிவித்தலை விடுத்துள்ளது. கட்சிகளின் பிரதிநிதிகளுடன் இந்தச் செயலணி இது தொடர்பில் கலந்துரையாடியிருந்தது. அதன் பின்னர் மே தின நிகழ்வுகளுக்கு தடைவிதித்துள்ளது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். கொரோனாதான் இந்தத் தடைக்குக் காரணம் எனில் அதை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பேரணிகள் அல்லாமல் சிறு கூட்டங்களுடனாவது அந்த நிகழ்வை நடத்துவதற்கு அரசு அனுமதித்திருக்கவேண்டும்.


அரசின் இந்தத் தீர்மானத்தின் பிரகாரம் அரசுக்குள் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன என்று எதிரணியினரும், ஊடகங்களும் செய்திகளை வெளியிட்டு வருகின்றன. இது மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. எனினும் அரசு எடுத்த இந்தத் தீர்மானத்தை சவாலுக்கு உட்படுத்த விரும்பவில்லை, என்றார். (ஒ.5,22)

# சுகாதார நடைமுறைகளை மீறாதீர்

## மருத்துவ நிபுணர் கோரிக்கை

கொழும்பு, ஏப். 23

பொதுமக்களின் நலனில் அக்கறை கொண்டு சில தளர்வுகள் ஏற்படுத்தப்படுகின்றன. எனினும் கொரோனாத் தொற்றுக்கால சுகாதார நடைமுறைகளை அவர்கள் மீறக்கூடாது. இவ்வாறு விசேட மருத்துவ நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார். பொதுமக்கள் முக்கியமாக தேவையற்ற பயணங்களைக் குறைக்க வேண்டும். மிகவும் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டியது அவசியம். தொற்றுப்பரவலைக் கட்டுப்படுத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)



# பாதுகாப்பற்ற பொருள்களால் சபைக்குள் கடும் வாக்குவாதம்

கொழும்பு, ஏப். 23

நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாதுகாப்பற்ற பொருள்களை சபைக்குள் எடுத்து வருவது தொடர்பான விடயத்தில், இருதரப்பினருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் கடுமையான வாக்குவாதங்கள் இடம்பெற்றன.

எதிர்க்கட்சியினர் பாதுகாப்பற்ற சில பொருள்களை எடுத்து வந்துள்ளனர். அவற்றைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். எனவே அது தொடர்பில் விசேட விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்று சபை முதல்வரான அமைச்சர் தினேஷ் குணவர்தன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் சபையில் கோரிக்கை விடுத்தார்.

எதிர்க்கட்சியினர் சபைக்குள் பாதுகாப்பற்ற நிலைமையை உருவாக்க முயற்சிக்கின்றனர் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இதன்போது குறுக்கிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார, ஆளும் கட்சியினரும் சபைக்குள், பாதுகாப்பற்ற நிலைமையை உருவாக்குவதற்கான பொருள்களைக் கொண்டு வந்துள்ளனர்.

அவை தொடர்பிலும் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதனால் ஆளும் கட்சியினருக்கும், எதிர்க்கட்சியினருக்கும் இடையில் கடுமையான வாக்குவாதங்கள் இடம்பெற்றன. (ம-4)

# உள்நாட்டு உற்பத்தியாளரிடம் இனி பாடசாலைச் சீருடைகள்

கொழும்பு, ஏப். 23

2022ஆம் ஆண்டுக்கான பாடசாலைச் சீருடைகளை விநியோகிக்கும் பொறுப்பு, உள்நாட்டு ஆடை உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படவுள்ளது. உள்நாட்டு உற்பத்தியாளர்களை ஊக்குவித்து, பாடசாலைச் சீருடைகளை அவர்களிமிருந்து கொள்வனவு செய்ய அமைச்சரவை ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளது. அதனடிப்படையில் கைத்தொழில் அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள உள்நாட்டு ஆடை உற்பத்தியாளர்களிடம், அதற்கான விலையைக் கோரி விநியோகஸ்தர்களைத் தெரிவுசெய்வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. அடுத்த வருடத்துக்கான பாடசாலைச் சீருடைகள், இந்த வருட இறுதித் தவணைக்கு முன்னர் மாணவர்களுக்கு விநியோகிக்கப்படும். அதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

# 'ஓம்' என்று எழுது

■ மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்

கஞ்சா என்னும் போதைப்பொருளுக்கு அடிமையாகி விட்டான் ஒரு மனிதன். இதிலிருந்து அவன் விடுபடவேண்டுமென்று பெரிதும் முயன்றும் அவனால் முடியவில்லை. நாளுக்கு நாள் அந்தப் பழக்கம் அதிகமாகிக்கொண்டு வந்தது. உடலில் நோயும் கண்டது. ஒருநாள் அவன் ஊருக்கு ஒரு பெரியவர் வந்தார். அவரிடம் போய் வணங்கி தன் நிலையைச் சொன்னான் கஞ்சாப் பேர்வழி.

"இந்தக் கெட்ட பழக்கத்தை விட வேண்டுமென்று மனமார விரும்புகிறேன். ஆனாலும் விட முடியவில்லை என அவரை பிடித்துக் கொண்டு கதறினான். தினமும் எவ்வளவு கஞ்சா சாப்பிடுகிறாய்?"என்று பெரியவன் கேட்டார். இவ்வளவு சாப்பிடுகிறேன் என்று கையால் காண்பித்தான். உடனே அந்தப் பெரியவர் வெண்கட்டித் துண்டு ஒன்றை எடுத்து அவன் சாப்பிடுகிற அளவாக அதை உடைத்து அவன் கையில் கொடுத்தார். 'நீ கஞ்சா சாப்பிடுவதை விட வேண்டியதில்லை. ஆனால் ஒவ்வொரு நாளும் வெண் கட்டித் துண்டின் அளவுதான் நீ சாப்பிட வேண்டும் அப்பொழுது உன் நோயும் குணமாகி விடும்"என்றார்.

கஞ்சா ஆசாமிக்கு ஒரே மகிழ்ச்சி ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள் கஞ்சாவையும் நிறுத்த வேண்டாம். நோயும் குணமாகி விடும் ஆகா! இவரல்லவோ பெரியவர் என்று எண்ணி மகிழ்ந்து போனான். அந்தச் சமயம் பார்த்துப் பெரியவர், ஆனால் ஒரு நிபந்தனை என்று ஆரம்பித்தார். ஒவ்வொரு நாளும் நீ கஞ்சா உருண்டையைச் சாப்பிடுவதற்கு முன்பு இந்த வெண்கட்டித் துண்டால் கரும்பலகையில் 'ஓம்' என்று மூன்று தடவை எழுதி விட்டு அதன் பிறகு உள்ள வெண்கட்டியின் அளவுதான் கஞ்சா சாப்பிட வேண்டும் . அப்போது தான் நோய் குணமாகும் தெரிகிறதா?"என்றார்.



"என்னவோ ஏதோ என்று பயந்து போய் விட்டேன். இது என்ன பிரமாதம்? தாங்கள் கூறியபடியே செய்கிறேன் நோய் குணமாகட்டும்"என்றான் அவன். அன்றைய தினமே இதைச் செய்யத் தொடங்கினான். இப்படியே ஒவ்வொரு நாளும் தொடர்ந்து செய்து வந்தான். 'ஓம்'எழுத எழுதப் பயன்படுத்திய வெண்கட்டியும் தேய்ந்து கொண்டே வந்தது. இது அவனுக்குத் தெரியவில்லை. தினமும் அந்த வெண்கட்டியில் எவ்வளவு அளவு இருக்கிறதோ அந்த அளவுதானே சாப்பிட வேண்டும். வெண்கட்டி கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து வந்ததால் கஞ்சாவின் அளவு குறைந்து கொண்டே வந்தது. ஒருநாள் வெண்கட்டி தீர்ந்து திர்ந்து போய்விட்டது. அன்றைக்கு அவன் கஞ்சா சாப்பிடவில்லை. அதற்குப் பிறகும் சாப்பிடவில்லை. அதற்கு அவன் ஆசைப்படவும் இல்லை. அவனுக்குத் தெரியாமலே கஞ்சாப் பழக்கம் அவனை விட்டுப் போய்விட்டது."ஓம்" எழுதும் பழக்கம் அவனைப் பிடித்துக் கொண்டது. நோயும் தீர்ந்து விட்டது உடலும் உள்ளமும் சரியாகிப் போய்விட்டன. புதிய வெண்கட்டிகள் வாங்கி அவன் தொடர்ந்து மூன்று முறையல்ல பல முறைகள் ஓம் எழுதும் பழக்கத்துக்கு அடிமையாகி புண்ணியத்தைச் சேர்த்துக்கொண்டிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிலவ வருட

# தமிழ்ப் புத்தாண்டு ராசி பலன்கள்

**தமிழ் ஆண்டுகள் வரிசையில் இந்த ஆண்டு 'பிலவ' வருடமாக தொடங்குகிறது. அதன்படி இன்று மீன ராசிக்கான பலன்களைப் பார்ப்போம்.**

சகலகலா வல்லவர்களாக அனைத்து விஷயங்களிலும் அறிவும் ஆர்வமும் கொண்ட மீன ராசி அன்பர்களே.. உங்களுக்கு இந்தப் பிலவப் புத்தாண்டு எப்படிப்பட்ட பலன்களைத் தரப்போகிறது என்பதைப் பார்ப்போம்.

ராசிக்கு 2 இல் அதாவது தன ஸ்தானத்தில் புத்தாண்டு பிறப்பதால் பணவரவு அதிகரிக்கும். புது முடிவுகள் எடுப்பீர்கள். அரைகுறையான வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். கணவன் மனைவிக்குள் அன்பும் அந்நியோன்யமும் அதிகரிக்கும். அதே நேரம் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்வதும் நல்லது. தேவையில்லாதவற்றுக்காகச் சண்டை போடாதீர்கள். வாழ்க்கைத் துணையின் உடன் பிறப்புகளால் செலவுகள் கூடினாலும், நிம்மதி பெருகும். பிள்ளைகளின் ஆசைகளைப் பூர்த்தி செய்வீர்கள். உங்கள் பையனுக்கு, நல்ல பெண் அமைந்து, ஆனி ஆவணி மாதங்களில் கல்யாணம் முடியும். பழைய சொத்தை விற்றுவிட்டுப் புதிய சொத்து வாங்குவீர்கள். பிள்ளை இல்லாத தம்பதிக்கு குழந்தைப் பாக்கியம் உண்டாகும். சகோதர சகோதரிகளால் நன்மையும் நிம்மதியும் உண்டாகும். அவர்களது தேவைக்கு உதவுவீர்கள். புதிய ஆடை ஆபரணங்கள் சேரும்.

வருடத்தின் மத்திய பகுதியில் உடல் நலனில் கவனம் செலுத்துங்கள். வெளி உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. உறவினர் நண்பர்களுக்கு மத்தியில் மதிப்பு மரியாதை கூடும். நீண்ட நாள்களாகப் போக நினைத்த குலதெய்வக் கோயிலுக்கு, விரும்பியபடி சென்று வருவீர்கள்.

வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வி.ஐ.பிகளின் உதவி கிடைக்கும். ஐப்பசி, பங்குனி மாதங்களில் வீடுமனை வாங்குவீர்கள். குடும்ப வருமானம் உயரும். உங்களால் வளர்ச்சியடைந்தவர்கள், பக்க பலமாக இருப்பர். முன்கோபத்தைக் குறையுங்கள். பணம் கொடுக்கல்வாங்கலில் கவனம் தேவை. யாருக்காவும் பிணைக் கையெழுத்து இட வேண்டாம். கனவுத் தொல்லை, தூக்கம் இன்மை வந்து போகும்.

**ராகுகேது சஞ்சாரம் எப்படி?**

ஆண்டுத் தொடக்கம் முதல் 20.3.2022 வரை ராகு 3இல் நிற்பதால் எதிர்பாா்த்த வகையில் பணம் வரும். பூர்வீகச் சொத்தை மாற்றியமைப்பீர்கள். கேது 9இல் நிற்பதால் தந்தையாருக்கு மருத்துச் செலவுகள் வந்த வண்ணம் இருக்கும். 21.3. 2022 முதல் வருடம் முடியும் வரை ராகு 2இல் நுழைவதால் வீண் பதற்றம், பேச்சில் கடுகடுப்பு, பதற்றம் அதிகரிக்கும். கேது 8இல் நுழைவதால் விபத்து, திடீர் பயணங்கள் வரக்கூடும். ஆவணி மாதத்தில் கல்யாணம், சீமந்தம், புது மனை புகுவிழா, காதணி விழா என வீட்டில் விஷேசங்கள் நடக்கும். வெளிவட்டாரத்தில் எல்லோரும் உங்களை மதிப்பார்கள். எதிர்த்துப் பேசியவர்கள், வலிய வந்து நட்புப் பாராட்டுவார்கள். வி.ஐ.பிகள் நண்பர்களாவார்கள்.




**பணவரவும் சுபச் செலவுகளும் அதிகரிக்கப்போகும் பிலவ வருடம்...**

14.4.2021 முதல் 13.9.2021 வரை மற்றும் 13.11.2021 முதல் வருடம் முடியும் வரை 12ம் வீட்டில் குரு அமர்வதால் எதிர்பாராத பயணங்கள் அதிகரிக்கும். கனவுத் தொல்லை, தூக்கமின்மை வந்து செல்லும். எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லையே என ஆதங்கப்படுவீர்கள். பணக் கொடுக்கல் வாங்கல் தொழில் செய்பவர்கள் தகுந்த ஆதாரமில்லாமல் யாருக்கும் பணம் தரவேண்டாம். பிள்ளை களின் உயர்கல்வி, உத்தியோகம் காரணமாக அவர்களைப் பிரிய வேண்டிய சூழ்நிலை உருவாகும். கர்ப்பிணிகள் மருத்துவரின் ஆலோசனைக்கேற்ப உணவு முறைகளை அமைத்துக் கொள்வது நல்லது. ஆனால் 14.9.2021 முதல் 12.11.2021 வரை குருபகவான் லாப வீட்டிலேயே தொடர்வதால் தொட்டது துலங்கும். திருமணம், சீமந்தம், கிரகப்பிரவேசம் போன்ற சுப நிகழ்ச்சிகள் வீட்டில் ஏற்பாடாகும். செலவுகளைக் குறைக்கத் திட்டமிடு வீர்கள். எங்கு சென்றாலும் வரவேற்பு அதிகரிக்கும்.



**சனி பகவான் அருளும் பலன்கள்**

உங்கள் ராசிக்கு லாப வீட்டில் சனியும் பலம் பெற்று அமர்ந்திருப்பதால் உங்களைத் தலைநிமிர வைக்கும். செயலில் வேகம் கூடும். வருமானம் உயரும். பிரபலங்களின் பட்டியலில் இடம்பிடிப்பீர்கள். தொலைநோக்குச் சிந்தனை அதிகரிக்கும். பெரிய பதவிகள் தேடி வரும். அழகு, இளமை கூடும். பாதியில் நின்ற வீடு கட்டும் பணியை முடித்துப் புது வீட்டில் குடிபுகுவீர்கள். அனுபவபூர்வமான பேச்சால் எல்லோரையும் கவர்வீர்கள். ஆடம்பரச் செலவுகளை குறைத்துச் சேமிக்கத் தொடங்குவீர்கள். உங்களை வீழ்த்த முயன்ற பலரும் விரக்தி அடைவர். உங்களது உழைப்பை மேலதிகாரி புரிந்து கொள்வார். இனி, கூடுதல் நேரம் வேலை பார்க்கும் தொல்லை இருக்காது. சக ஊழியர்களிடையே உங்களைப் பற்றி நிலவி வந்த அதிருப்தி நீங்கும். கலைத்துறையினருக்குப் புதிய வாய்ப்புகள் தேடி வரும். உங்களது படைப்புகளுக்கு மக்கள் மத்தியில் பாராட்டுகள் குவியும்.

**இந்தப் புத்தாண்டு உங்களது திறமைகளை அதிகப்படுத்துவதுடன், சகிப்புத் தன்மையையும் பணவரவையும் தரும்.**

## இன்றைய நாள்

**மேடம்:** பொது வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளவர்களின் மதிப்புக் கூடும். வாக்குவன்மை கூடும். முயற்சியால் சிலருக்கு உயர்வு வரும். வெளியூரில் வேலை கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**இடபம்:** திருமணம் போன்ற சுப விஷயங்களில் முன்னேற்றம் வரும். உங்களின் கோரிக்கை பற்றி மேலதிகாரியிடம் பேச உகந்த நாள். காதல் முயற்சிகள் கைகூடி வரும்.

**மிதுனம்:** வருமானம் கூடப்போவது பற்றிய செய்திகள் இன்று வரும். சக ஊழியர்களுடன் ஒற்றுமை அதிகரிக்கும். நிம்மதி கூடும். இன்று சந்தோஷம் அதிகம் நிறைந்த நாளாக அமையும்.

**கடகம்:**சமீபகாலம் வரை மனதை அரித்த கவலை ஒன்று நீங்கும். குடும்பத்தில் ஒருவரது ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படும். தந்தைக்கு தன வரவு உண்டாகும். பாராட்டுப் பெறுவீர்கள்.

**சிம்மம்:**பிள்ளைகள் மூலமாகப் புதிய நட்பு வரும். சுபச்செலவு ஏற்படும். உங்களின் வாக்கு வன்மை அதிகரிக்கும். சந்தோஷம் கூடி வரும். வழிபாட்டு எண்ணம் ஏற்படும்.

**கன்னி:** முயற்சிக்கு வெற்றி கிடைக்கும். நல்ல செய்தி தேடி வரும். எதிர்ப்பாலினத்தாரால் வந்த பிரச்சினைகள் நீங்கும். நிம்மதி ஏற்படும். வாழ்க்கைத்துணையுடன் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**துலாம்:** காரசாரமான விவாதம் வரும்போது விட்டுக்கொடுத்து ஜெயிப்பீர்கள். பிள்ளைகள் உடல் ஆரோக்கியத்தில் இருந்து வந்த இடர் நீங்கும். நற்செய்தி உண்டு.

**விருச்சிகம்:** பிள்ளைகளை கண்காணிக்க வேண்டிய அவசியம் இல்லை. தேவையற்ற நட்பு வட்டாரங்களைத் தவிர்ப்பது மிகவும் நல்லது. நம்பிக்கை இழந்த விஷயம் இன்று கைகூடும்..

**தனுசு:** குடும்பச் சூழ்நிலை மகிழ்ச்சி தரும். பணிச்சுமை குறையும். உழைப்பை அதிகரிப்பீர்கள். வாழ்வில் வசதிகள் பெருகும். உங்களின் மதிப்புக் கூடும். மனதில் உற்சாகம் ஏற்படும்.

**மகரம்:** புதிய திட்டங்களை நிறைவேற்ற முயற்சி செய்வீர்கள். உங்களின் பேச்சினால் புதிய பிரச்சினை தேடி வரக்கூடும். மனம் சந்தோஷம் அடையும்படியான நிகழ்ச்சிகள் நடைபெறும்.

**கும்பம்:** பணியில் இருந்த மந்த நிலை மாறும். கோபம் குறையும். அலுவலகத்தில் பணிச்சுமை குறையும். புதுப் பயிற்சி கிடைக்கும். பதவி உயர்வோடு வேறு இடங்களுக்கு மாற்றல் கிடைக்கக்கூடும்.

**மீனம்:** வாழ்வின் சுக சௌகர்யங்களை அதிகரித்துக் கொள்வீர்கள். சிக்கல் ஏற்படுத்தும்படியான விவாதங்கள் செய்ய வேண்டாம். விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலமாக நற்பெயர் எடுப்பீர்கள்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதிமன்ற தீர்ப்புக்கமைய
# மரங்கள் வளர்க்கும் பணிகள் ஆரம்பம்

சாவகச்சேரி,ஏப். 23

சாவகச்சேரி நீதிமன்றப் பணிப்புக்கு அமைய, சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட மீசாலை தொடக்கம் நுணாவில் வரையான ஏ-9 வீதியில் பயன்தரு பழமரங்கள் வளர்க்கும் பணிகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன.

முன்னர் மதுபோதையில் வாகனம் செலுத்துவோர் நீதிமன்றில் முற்படுத்தப்படும்போது, தண்டப் பணத்துடன் சாரதிய அனுமதிப் பத்திரம் நீதிமன்றில் தடுத்து வைக்கப்படும் செயற்பாடு முன்னெடுக் கப்பட்டது

தற்போதைய நீதிமன்றின் நீதிவான், மதுபோதையில் வாகனம் செலுத்துவோருக்கு தண்டப்பணத் துடன் 40 மணி நேர சமூகப்பணி மேற்கொள்ள உத்தரவிடுகிறார்.

இச் சமூகப் பணியானது, குறித்த நபர் 5 பயன்தரு பழமரக்கன்றுகளை வாங்கி நகரசபை எல்லைக் குட்பட்ட ஏ-9 வீதியில் நட்டு அதற்கு கூடு கட்டி நீர் ஊற்றிப் பராமரிக்க வேண்டும்.

கன்றுகள் முளைக்க ஆரம்பிக்கும் வரை,நீர் ஊற் றிப் பராமரித்து முளை வந்த பின்னர் நகரசபை யிடம் ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவிடப் படுகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி பொலிஸார் மதுபோதையில் வாகனம் செலுத்திய எட்டுப் பேருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கள் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. எட்டுப் பேருக் கும் தலா 25 ஆயிரம் ரூபா வீதம் மொத்தமாக இரண்டரை லட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது டன், இவர்களை ஏ-9 வீதியில் பயன்தரு பழமரக் கன்றுகளை நட்டு வளர்க்கும் 40 மணி நேர சமூ கப் பணியில் ஈடுபடுத்த, நீதிமன்ற சமுதாயஞ்சார் சீர்திருத்தப் பிரிவில் ஒப்படைக்குமாறு பொலிஸா ருக்கு உத்தரவிடப்பட்டது. (ஐ-9)



# ஈஸ்டர் படுகொலை நினைவேந்தல் மன்னாரிலும் கடைப்பிடிக்கப்பட்டது

மன்னார், ஏப். 23

**மன்னாரில் ஈஸ்டர் தாக்குதலில் உயிர்நீத்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் மாலை 5 மணிக்கு மன்னாரிலுள்ள அந்த அமைப்பின் அலுவலகத்தில் இடம்பெற்றது.**

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத் தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நினைவேந்தல் நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள், மனித உரிமைகள் செயற் பாட்டாளர்கள் மற்றும் பொது அமைப் புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் உயிர் நீத்த மக்களை நினைவு கூர்ந்து தீபம் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். (ச-56)

# ஹரீஸ் எம்.பிக்கு இணைப்பு செயலாளர்

கொழும்பு,ஏப்.23

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னரும், சிறிலங்கா முஸ் லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான எச்.எம். எம். ஹரீஸின், கல் முனை காரியலாயத்துக் கான இணைப்புச் செய லாளராக எம்.ஏ சப்றாஸ் நிலாம் நியமிக் கப்பட் டுள்ளார்.

மருதமுனையைப் பிறப் பிடமாகக் கொண்ட இவர் சப்ரகமுவா பல்கலைக் கழகத்தில் சமூகவியல் மற்றும் மானுடவியல் துறையில் விஷேட கலை மாணிப் பட்டம் பெற்ற வராவார். (ப-4)

# 25 மாவட்டங்களிலும் முப்படையினர் கடமையில்

கொழும்பு, ஏப். 23

இலங்கையின் சகல நிர்வாக மாவட்டங்களிலும் மக்களின் பாதுகாப்புக்காக இராணுவம், விமானப்படை மற்றும் கடற்படை ஆகியனவற்றை கடமையில் ஈடுபடுத்தும் வர்த்தமானி ஜனாதிபதியால் கடந்த 20ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது. இந்த வர்த்தமானி ஒவ்வொரு மாதமும் வெளியிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ.இ)



# மாந்தை கிழக்கில் நடமாடும் சேவைகள்

முல்லைத்தீவு, ஏப். 23

முல்லைத்தீவு மாந்தை கிழக்கில், மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தினதும் இன் னும் சில இணை நிறுவனங்க ளின் ஏற் பாட்டிலும் 'சிவில் சார்' நடமாடும் சேவை கடந்த 20ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெற்றது.

வட மாகாண பிரதிப் பதிவாளர் நாயகம், பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் பிறப்பு, இறப்பு, விவா கச் சான்றிதழ்கள் மற்றும் தேசிய அடை யாள அட்டை வழங்கல் போன்றவை செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. (ச-13)

# 110 மேலதிக விளக்குகளால் காரைநகர் முழுவதும் ஒளி

*தவிசாளர் கேதீஸ்வரதாஸ் தெரிவிப்பு*

காரைநகர், ஏப்.23

காரைநகர் பிரதேசம் முழுவதும் விரை வில் மின்சார வீதி விளக்குகள் மூலம் ஒளியூட்டப்படவுள்ளது என்றும், இதற் கான துரித நடவடிக்கைகள் முன்னெ டுக்கப்பட்டுள்ளன என்றும் காரைநகர் பிரதேச சபைத் தவிசாளர் வி.கேதீஸ்வ ரதாஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி விக்கையில்; ரைநகருக்கு உட்பட்ட வகையில் பொதுமக்களின் பாதுகாப்பு கருதி தேவையான வீதி விளக்குகளைப் பொருத்தமான இடங்களில் பொருத்தி யுள்ளோம். எனினும் பிரதேச சபைக் குட்பட்ட வீதிகளின் இரவு நேர இலகு போக்குவரத்து மற்றும் பாதுகாப்புக் கருதி 110 வீதி விளக்குகள் மக்கள் பிரதி நிதிகளுடன் இணைந்த வகையில் பொருத்தப்பட்டுவருகின்றன. இதன் மூலம் ஒன்பது கிராம அலுவலர் பிரிவு களைச் சேர்ந்த அனைத்து வட்டார மக்களும் முழு நன்மையடையவுள்ள னர்.

இதேவேளை விரைவில் பன்முகப்படுத் தப்பட்ட நிதி மூலம் கிடைக்கும் நிதி யைக்கொண்டு ஜெ47 கிராம அலுவ லர் பிரிவுக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியில் மேலதிக வீதி விளக்குகள் பொருத்தப்படும் - என்றார். (ஐ-50)



ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு கிளி நொச்சி இந்துக் கல்லூரியில் பாடசாலை அதிபர் தலைமையில் நேற்று முன்தினம் காலை 8.45 மணிக்கு இடம்பெற்றது. இதில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தினர். (ச-159)

# மழையால் வலி. கிழக்கில் கீரைச் செய்கை அழிவு

வலிகிழக்கு, ஏப்.23

வலி.கிழக்கில் கீரைச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த வாரம் பெய்த மழையால் இந்த கீரைப் பயிர் கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன என்று செய்கை யாளர்கள் தெரிவித்தனர்.

நீர்வேலி, கோப்பாய், சிறுப்பிட்டி மற்றும் புத்தூர் ஆகிய பகுதிகளில் திடீரெனக் கொட்டிய மழையால் இப்பகுதியில் செய்கை பண்ணப்பட்டிருந்த கீரை களே இவ்வாறு பாதிக்கப்பட்டன. இதேவேளை இந்தக் கீரைச் செய்கைப் பாதிப்பால், சந்தையில் கீரைக்கு பற்றாக்குறையும் தட்டுப்பாடும் ஏற்பட்டுள் ளன. திருநெல்வேலிச் சந்தையில் கீரை ஒரு பிடி 80 ரூபாவுக்கு மேல் விற்பனைசெய்யப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது. (ப-17)

# ஓய்வூதியத்தை நிறுத்தியமைக்கு எதிராக கொழும்பில் போராட்டம்

கொழும்பு,ஏப்.23

2016 2019 வரையான காலப்பகுதியில் ஓய்வுபெற்ற அரச ஊழி யர்களுக்கு கடந்த ஆண்டு முதல் வழங்கப்பட வேண்டிய அதிகரித்த ஓய்வூதியம் நிறுத்தப்பட்டமைக்கு எதிப்புத் தெரிவித்து போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி க்கு கொழும்பு, விகாரமஹாதேவி பூங்காவுக்கு முன்னால் இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள பாதிக்கப்பட்ட ஓய்வூதியதாரர்களை அன்றைய இப் பேரணியில் கலந்துகொள்ளுமாறும் அழைப்பு விடுக்கின்றோம் என ஓய்வூதியதாரர்களின் உரிமைகளைப் பாதுகாக் கும் தேசிய இயக்கத்தின் உப தலைவர் ஏ.எல்.முகம்மதுமுக்தார் தெரி வித்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஓர் இனம் இன்னோர் இனத்துக்கு எதிராக செயற்படுவது உகந்ததல்ல

## மன். மறைமாவட்ட ஆயர் தெரிவிப்பு

மன்னார், ஏப்.23

**நாட்டில் கடந்த 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற குண்டுத்தாக்குதலுக்குக் காரணமாக இருந்தவர்களை இன்னும் இனம் கண்டு கொள்ளவில்லை. அவர்களுக்குப் பின்னால் யார் இருந்தார்கள் என்பதையும் இன்னும் சரியாகக் கண்டு கொள்ளவில்லை. எனவே எங்களுக்கு ஒரு நீதி அவசியம்.**

இவ்வாறு மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார். கடந்த 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலின் 2 ஆவது வருட நினைவு நேற்றுமுன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

இரண்டு வருடங்களுக்கு முன்பாக பாஸ்கா திருவிழா அன்று குண்டு வெடிப்புக்களால் பலர் இறந்தார்கள். அந்தக் குண்டு வெடிப்புக்களில் இரண்டு பெரிய கத்தோலிக்க ஆலயங்கள் மற்றும் மட்டக்களப்பிலிருந்து ஒரு கிறிஸ்தவ ஆலயத்திலும் இடம்பெற்ற குண்டுத்தாக்குதல்களில் மக்கள் அதிகம் பேர் உயிரிழந்தார்கள். அத்தோடு இன்னும் பல ஹொட்டல்களிலும் அன்றைய தினம் இடம்பெற்ற குண்டுத்தாக்குதல்களால் மக்கள் உயிரிழந்தனர். நாங்கள் அவர்களை இன்று விசேடமாக நினைவு கூருகின்றோம். இரண்டு ஆண்டுகள் கடந்து போனாலும் நாங்கள் எமது ஆலயங்களில் இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தியுள்ளோம் குண்டுத் தாக்குதலுக்கு காரணமாக இருந்தவர்களை இன்னும் இனம் கண்டு கொள்ளவில்லை. அவர்களுக்குப் பின்னால் யார் இருந்தார்கள் என்பதையும் இன்னும் சரியாகக் கண்டுகொள்ளவில்லை. எனவே தான் எங்களுக்கு ஒரு நீதி அவசியம்.

குண்டு தாக்குதல்களை யார் செய்தது எதற்காக செய்தார்கள் என்பதை நாங்கள் அறிந்து கொள்ள வேண்டும். ஒரு இனம் இன்னும் ஒரு இனத்துக்கு எதிராக செயற்படுவது உகந்தது அல்ல. எந்த மதத்தைச் சார்ந்தாலும் எந்த மொழியைப் பேசினாலும் நாங்கள் ஒரு நல்ல இணக்கப்பாட்டுடன் ஒற்றுமையாக வாழ்வது முக்கியம்.

தவறு செய்தவரை மன்னிப்பது இயேசுவினால் எங்களுக்கு கொடுக்கப்பட்ட ஒரு கட்டளை. ஆகையால் தான் நாங்கள் இப்படியான ஒரு பெரிய தவறு செய்தவரைக் கூட மன்னிக்க அழைக்கின்றோம். ஆனாலும் எது உண்மை?என்ன நடந்தது? என்ற நீதியை நாங்கள் அறிந்துகொள்வது எங்களுக்கு மிகவும் முக்கியமாக இருக்கின்றது என்றுள்ளது. (ப-56)



# ஒதியமலை கிராமத்துக்கு பேருந்து சேவை ஆரம்பம்

முல்லைத்தீவு, ஏப்.23

முல்லைத்தீவு ஒதியமலை கிராமத்தில் இருந்து மீண்டும் பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக ஒதியமலை கிராமசேவகர் பிரிவில் நீண்டகாலமாக பஸ் சேவை இல்லாது இழுபறி நிலை காணப்பட்டது.

தற்போது பொதுமக்களின் வேண்டுகோளுக்கு இணங்க வடக்கு மாகாண தனியார் பேருந்துகள் சங்கத் தலைவரின் ஒழுங்குபடுத்தலுக்கு அமைவாக ஒதியமலை கிராமத்தில் இருந்து மீண்டும் பஸ் சேவையை ஒட்டுசுட்டான் பிரதேச செயளாலர் த.அகிலன் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். இந்த பஸ் சேவை ஒதியமலையில் இருந்து நெடுங்கேணி, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு மற்றும் பரந்தன் ஊடாக கிளிநொச்சி சென்று மீண்டும் ஒதியமலையை வந்தடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)



# யானைதாக்கி இறந்தவரின் குடும்பத்துக்கு காசோலை

சாவகச்சேரி ஏப். 23

கடந்த வருடம் மாங்குளம் பகுதியில் காட்டு யானையால் தாக்கப்பட்டு மரணமடைந்த நபரின் குடும்பத்துக்கு இடர்கால முகாமைத்துவ அமைச்சால் அனுப்பப்பட்ட இழப்பீட்டுத் தொகை கடந்த செவ்வாய்க்கிழமை மரணமடைந்தவரின் குடும்பத்தினிடம் வழங்கப்பட்டது.

கொடிகாமம் மத்தியைச் சேர்ந்த குடும்பத்தலைவர் கடந்த நவம்பர் மூன்றாம் திகதி மாங்குளம் பகுதிக்கு வேலைக்குச் சென்று விட்டு இரவு சைக்கிளில் வந்தபோது காட்டுப் பகுதியில் வைத்து அவரை யானை தாக்கியுள்ளது. இதனால் அவர் உயிரிழந்தார். காலையில் அவ்வழியே வந்தவர்கள் சடலத்தைக் கண்டு பொலிஸாருக்கு அறிவித்தனர். இந்த மரணம் தொடர்பாக தென்மராட்சி பிரதேச செயலர் பிரதேச இடர்கால முகாமைத்துவ அமைச்சுக்கு விண்ணப்பித்ததையடுத்து. இழப்பீட்டுத்தொகை அனுப்பி வைக்கப்பட்டது. இந்தக் கொடுப்பனவுக்கான காசோலை நேற்றுமுந்தினம் உதவிப் பிரதேச செயலரால் மரணமடைந்தவரின் மனைவியிடம் கையளிக்கப்பட்டது. (ப-9)

# கிராம அலுவலர் பிரிவுகளுக்கு தொழில்முயற்சியாளர்கள் தெரிவு

சாவகச்சேரி, ஏப்.23

பிரம்பு, பித்தளை மற்றும் மட்பாண்ட அமைச்சின் ஏற்பாட்டில் தென்மராட்சி பிரதேசத்தில் விதாதா திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுக்கும் ஒரு தொழில்முயற்சியாளர் உருவாக்கப்படவுள்ளனர்.


தொழில்முயற்சியாளரைத் தேர்ந்தெடுப்பதற்கான நேர்முகத் தேர்வு நேற்றுமுன்தினம் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

பிரதேச கிராம அலுவலர் பிரிவுகளில் கிராமத்துக்கு ஒரு தொழில் முயற்சியாளரைத் தெரிவு செய்து அவர்கள் மூலம் குறித்த பிரிவில் காணப்படும் வளங்களைப் பயன்படுத்தி தொழில்களை மேற்கொள்ளவும் அதற்கான உபகரணங்களை 75 சதவீதம் வரை மானிய விலையில் வழங்கவுள்ளதாகவும் அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் காணப்படும் வளங்களைப் பயன்படுத்தி அவற்றின் மூலம் தொழில்களை ஆரம்பித்து நாட்டின் உற்பத்தியை வளர்க்கவும் தொழில் முயற்சியாளர்களையும் உருவாக்கவும் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-9)



வன்னித் தமிழ் மக்கள் ஒன்றிய பசுமைப்புரட்சி செயற்றிட்டத்தால் கிளிநொச்சி, ஸ்கந்தபுரம் முன்பள்ளி சிறார்களுக்கு இயற்கையைப் பாதுகாக்கும் முகமாக பயன்தரும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. (ச-222)



மூளாய் வதிரன்புலோ ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவ தேர்த் திருவிழா கடந்த 19ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றது. (ச)

# இடைப்போகம் செய்தால் சட்ட நடவடிக்கை

## மன்னார் விவசாயிகளுக்கு வலியுறுத்து

மன்னார், ஏப்.23

மன்னாரில் இடைப்போக விவசாயம் செய்வதை நிறுத்தக்கோரி பிரதேச ரீதியாக மன்னார் கமநல சேவைகள் திணைக்களம் அறிவித்து வருகிறது.

கடந்த வாரம் நடைபெற்று முடிந்த மன்னார் விவசாயக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக மன்னாரில் சிறுபோக பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்பட இருப்பதால் இடைப் போகம் மற்றும் உப பயிர்ச் செய்கையை மேற்கொள்ள வேண்டாம் என்று பிரதேச ரீதியாக வாகனங்கள் மூலம் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுவருகிறது.

இந்த அறிவுறுத்தல்களை மீறிச் செயற்படும் விவசாயிகள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதோடு குறித்த காணிகளுக்கு உரிய நீர் விநியோகம், உரமானியங்கள் என்பவை தடை செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் மாவட்டச் செயலரின் அறிவுறுத்தலின் பேரில் மன்னார் கமநல சேவைகள் திணைக்களத்தால் இந்த அறிவுறுத்தல் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (ப-213)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 10 மணிக்கு பின்னர் சென்றாலே பத்திரிகைகளை படிக்க முடியும்

## ஸ்கந்தபுரம் நூலகத்தில் இந்த நிலை

கிளிநொச்சி, ஏப்.23
கிளிநொச்சி ஸ்கந்தபுரம் நூலகத்தில் பத்திரிகைகளைப் பார்வையிடவேண்டுமானால் முற்பகல் பத்து மணிக்குப் பின்னரே நூலகத்துக்கு செல்ல வேண்டிய நிலை உள்ளது என்று பொது மக்கள் சுட்டிக்காட்டியுள்ள னர்.
ஸ்கந்தபுரத்தில் உள்ள கடைகளுக்கு காலை 7 மணிக்கு முன்னரே பத்திரிகைகள் கிடைத்துவிடும் நிலையில், நூலகத்துக்கு முற்பகல் 10 மணிக்குப் பின்னரே பத்திரிகைகள் வருகின்றன. இதனால் வாசகர்கள் காலை வேளையில் பத்திரிகை வாசிக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது. எனவே காலையிலேயே பத்திரிகைகளை வாசிக்கக் கூடிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்றனர்.
இது தொடர்பாக அக்கராயன் வட்டார கரைச்சி பிர தேச சபை உறுப்பினர் சு.தயாபரனிடம் கேட்ட போது,
ஸ்கந்தபுரம் நூலகத்துக்கு தினமும் முற்பகல் 10 மணிக்கு பின்னரே பத்திரிகைகள் வருகின்றமை தொடர்பாக பொதுமக்களால் முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன. இவ்விடயம் தொடர்பாக பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் செயலாளர் ஆகி யோருக்குத் தகவல்களைத் தெரிவித்து பத்திரிகைகள் ஸ்கந்தபுரம் நூலகத்தில் நேர காலத்தில் பார்வைக்கு வைக்க வழிகள் ஏற்படுத்தப்படும் - என்றார். (ஐ-13)

## போதைப்பொருளுடன் பெண் ஒருவர் கைது

கொழும்பு,ஏப்.23
ஐஸ் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச் சாட்டில், பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
வனவாசலப் பிரதேசத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது, களனி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். அவரிடம் 35 கிராம் ஐஸ்போதைப்பொருள் மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப-4)


### மரண அறிவித்தல்

தோற்றம்
30 . 05 . 1975



மறைவு
22 . 04 . 2021

**காராளசிங்கம் ஜெயந்தன்**

புங்குடுதீவை பிறப்பிடமாகவும் திருநெல்வேலி பால்பண்ணை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட காராளசிங்கம் ஜெயந்தன் நேற்று (22.04.2021) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

108, பால்பண்ணை வீதி,
திருநெல்வேலி.

தகவல்: குடும்பத்தினர்.
076 334 8429, 077 087 9427

### மரண அறிவித்தல்



திருமதி
**இராமநாதன் சந்திரவதனா**
பிறப்பு 11.11.1961
இறப்பு 22.04.2021

மட்டுவில் வடக்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராமநாதன் சந்திரவதனா நேற்று (22.04.2021) வியாழக்கிழமை மாலை 6.00 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் அமரர்களான சற்குணநாதன் சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகளும், இராமநாதனின் அன்பு மனைவியும் ஆவார்.
அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (23.04.2021) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 4.00 மணிக்கு தகனக்கிரியைக்காக ஊரிப்பிட்டி இந்து மயானத்திற்கு (வண்ணாத்திப் பாலமருகில்) எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இராமநாதன் கோகிலதாஸ் (மகன்) - 076 639 7826

### மரண அறிவித்தல்

தோற்றம்
04 . 02 . 1944



மறைவு
22 . 04 . 2021

**சண்முகம் கந்தசாமி சற்குணம்**
(ஓய்வுபெற்ற பிரதம கணக்காய்வாளர் - கச்சேரி யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை தும்பளையை பிறப்பிடமாகவும் 'பொன்னகம்' புலோலி தெற்கு புலோலியை நிரந்தர வசிப்பிடமாகவும் சிவன் வீதி, கோவில் புதுக்குளத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சண்முகம் கந்தசாமி சற்குணம் அவர்கள் நேற்று (22.04.2021) வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான இலட்சுமிப்பிள்ளை கந்தசாமி தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்ற வள்ளிநாயகி சற்குணம் அவர்களின் பாசமிகு கணவரும், பிறேமாவதி (வவுனியா) காலஞ்சென்ற இராஜகுமாரி மற்றும் லலிதாமணி (கனடா) சந்திரவதனா (தும்பளை), நற்குணம் (கனடா), மனோகரி (இலண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கஜேந்திரன், சுஜேந்திரன் (வைத்தியர், ஆதார வைத்தியசாலை தெல்லிப்பளை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அன்புச் செல்வி (முகாமைத்துவ உதவியாளர் வவுனியா வளாகம்), பாலலோஜினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம் - கரவெட்டி) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிருத்திகா, நிருத்திகா, விபிசனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2021) வெள்ளிக்கிழமை சிவன்கோவில் வீதி, கோவில் புதுக்குளத்தில் உள்ள அவரது இல்லத்தில் மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வெளிக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன் கஜன் - 077 348 1441

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

திருமதி **உமாநிதி புவனராஜா**
(வலயக் கல்விப் பணிப்பாளர், முல்லைத்தீவு)
சேவைக்காலம் : 14.12.2016-26.04.2021



அடக்கமும் ஆளுமையும்
அன்பினில் கனிந்த பேச்சும்
ஆற்றலும் கொண்டு நின்றாய்
அளவிலா சேவையாற்றி - எங்கள்
வலயத்தை மிளிரச் செய்தாய்
ஏழைகள் ஏதிலிகள் இவர்களின்
கல்விக்கென்று இயற்றினாய்
பணிகள் கோடி.
வாழிய எங்கள் தாயே
ஒய்வுறும் காலம் சிறந்து
உளம்நிறை மகிழ்ச்சி கொண்டு
வாழிய நூறு ஆண்டு!
வாழிய வாழியவே!

வாழ்த்துக்கள்

அதிபர் சங்கம்
முல்லைக் கல்வி வலயம்

### 12 ஆம் ஆண்டு நினைவு

மறைவு
23 . 04 . 2009



நினைவில்
23 . 04 . 2021

**MRS.PAVALESWARY MYLVAGANAM**

வேர் இல்லாத மரம் போல்
என்னை நீ பூமியில் நட்டாயே
ஊர் கண் என் மேல் பட்டால்
உன் உயிர் நோக துடித்தாயே

உலகத்தின் பந்தங்கள் எல்லாம்
நீ சொல்லி தந்தாயே......
பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில்
வழிநடத்திச் சென்றாயே....
உனக்கே ஓர் தொட்டில் கட்டி
நானே தாயாய் மாறிட வேண்டும்....

**அம்மா என்னும் மந்திரமே!**
**அகிலம் யாவும்**
**உன்னடியே.....**

V.Ramesh


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதன உரிமைமாற்ற அறிவித்தல்

## வலிகாமம் வடக்கு பிரதேசசபை - மல்லாகம் உப அலுவலகம்

**விண்ணப்பதாரர் பெயர் :- கோணேஸ்வரன் யசீதரன் பெண் ஹம்சன்னா**
**முகவரி :- வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு, கொக்குவில்**

வலிகாமம் வடக்கு பிரதேசசபை மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 17, ஆதன இல 61/2, மில் ஒழுங்கையில் அமைந்துள்ள மல்லாகம் கோவிற்பற்றும் இறையுமான அபையன் சீமா என்ற ஆதனம் சரஸ்வதி W/O பத்மநாதன் என்ற பெயரில் ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

குறித்த ஆதனத்தை பத்மநாதன் கைம்பெண் சரஸ்வதி பிரசித்த நொத்தாரிஸ் S.இராமலிங்கம் முகதாவில் நிறைவேறிய 11213 / 06.01.1975 உறுதி மூலம் சின்னத்தம்பி இராசேந்திரம், சின்னத்தம்பி தெய்வேந்திரம், சின்னத்தம்பி சிவனேசன், சின்னத்தம்பி சிவதொண்டன் ஆகியவர்களுக்கு அறுதியளித்துள்ளார். பின்னர் சின்னத்தம்பி சிவசேன் இறந்துபோக மிகுதி மூன்று சகோதரர்களும் அவரின் பங்கினையும் சேர்த்து பிரசித்த நொத்தாரிஸ் மு.திருநாவுக்கரசு முகதாவில் நிறைவேறிய 768/07.03.1983 உறுதி மூலம் பிரிவிட்டுக் கொண்டனர். பின்னர் சின்னத்தம்பி தெய்வேந்திரம், சின்னத்தம்பி சிவதொண்டன் ஆகியவர்கள் தமது பங்கினை பிரசித்த நொத்தாரிஸ் மு.திருநாவுக்கரசு முகதாவில் நிறைவேறிய 769/07.03.1983 இலக்க உறுதி மூலம் இராசசேகரம் மகள் இராஜஸ்ஸ்ரீக்கு தவணை அறுதியாக வழங்கி பின் அதே நொத்தாரிஸ் முகதாவில் 1110 / 27.01.1986 இலக்க உறுதி மூலம் மீண்டனர். பின்னர் சின்னத்தம்பி தெய்வேந்திரம், சின்னத்தம்பி சிவதொண்டன் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிஸ் அ.உமாசங்கர் முகதாவில் நிறைவேறிய 841 / 19.02.1987 இலக்க உறுதி மூலம் சுந்தரம் நாகலிங்கத்திற்கு ஈடு வைத்துள்ளனர். இந்த ஈட்டினை மீண்டதற்கான ஆவணம் எதுவுமின்றி பின்னர் பிரசித்த நொத்தாரிஸ் ந.தம்பிமுத்தன் முகதாவில் நிறைவேறிய 3531 / 16.12.2002 இலக்க உறுதி மூலம் சின்னத்தம்பி இராசேந்திரத்திற்கு நன்கொடை வழங்கியுள்ளனர். அவர் அதே நொத்தாரிஸ் முகதாவில் நிறைவேறிய 3533 / 16.12.2002 இலக்க உறுதி மூலம் சின்னத்தம்பி சிவ தொண்டனுக்கு நன்கொடை வழங்கியுள்ளார். பின்னர் சின்னத்தம்பி சிவதொண்டன் பிரசித்த நொத்தாரிஸ் வி.இளங்குமார் முகதாவில் நிறைவேறிய 870 / 25.01.2021 இலக்க உறுதி மூலம் கோணேஸ்வரன் யசீதரனுக்கும் பெண் ஹம்சன்னாவுக்கும் அறுதியாக வழங்கியுள்ளார்.

**ஆதன விபரம்**
வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேசசபை மல்லாகம் கோவிற்பற்றும் இறையுமான "அபையன் சீமா" உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் ட.பிரணவன் அவர்களின் 152/ 24.01.2021 இலக்க நிலஅளவைப்பட வரைபடத்தில் துண்டு 1 எனக் காட்டப்பட்ட நிலப்பரப்பு 02 குளி 01.00 :

**கிழக்கு** - வரதானந்தன் பெண் இந்திராதேவியினதும் சத்தியமூர்த்தி சஞ்சீவனதும் ஆதனம்

**வடக்கு** - ஒன்பது அடி அகலப்பாதை


**மேற்கு** - பாலசுந்தரம் மதனராஜ்ஜின் ஆதனம்

**தெற்கு** - துரையப்பா விவேகானந்தராசாவின் ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை கோணேஸ்வரன் யசீதரன் பெண் ஹம்சன்னா என்னும் பெயரில் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளிஅல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு.சோமசுந்தரம் சுகிர்தன் தவிசாளர்,**
**வலிகாமம் வடக்குபிரதேசசபை,**
**காங்கேசன்துறை.**
**(கொல்லங்கலட்டி)**

# மரண அறிவித்தல்



## ராஜேந்திரம் விஸ்வலிங்கம் கந்தையா

யாழ். சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Monchengladbach ஐ வசிப்பிடமாகவும் கொண்ட ராஜேந்திரம் விஸ்வலிங்கம் கந்தையா அவர்கள் 20.04.2021 செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா தங்கரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசதுரை பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், மார்க்கிறட் அவர்களின் அன்புக் கணவரும், ஒலிவியா, சந்தோஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், வினோ அவர்களின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற தெய்வேந்திரம், தர்மேந்திரன், கமலா (பிரான்ஸ்), லலிதா (ஜேர்மனி), நாகேந்திரன் (ஜேர்மனி), அருள் (இலங்கை), சுமி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், மரியதாஸ் (கனடா), அன்ரன் (இலங்கை), காலஞ்சென்ற ஜேசுதாசன் ஆகியோரின் மைத்துனரும், லியாஸ், ஆதித் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் Lilienthalstrabe 185, 41069 Monchengladbach (Germany) ஜேர்மனியில் (27.04.2021) வியாழக்கிழமை மு.ப 10.00 மணிக்கு இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**மருமகன்- +4916296O8789**
**மகள்- +491729514910**
**சகோதரர்- +491772131931**
**அம்மா- +94763771709**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# கண்ணீர் அஞ்சலி

யாழ் போதனா வைத்தியசாலையில்
சிரேஸ்ட போதனாசியராக கடமையாற்றும்
**திரு. கோணேசப்பிள்ளை நந்தகுமார்**
அவர்களின் அன்புத் தாய்

## கோணேசப்பிள்ளை தங்கரத்தினம்

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிப்பதோடு அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

தாதியர் நலன்புரி சங்கம்
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

**அன்னை மடியில் 28.02.1948**



**இறைவன் அடியில் 24.03.2021**

அமரர்
## சரோஜினிதேவி சிவஞானசுந்தரம்

தமதன்புச் செல்வங்களெம் உயர்விற்காய்
உருகியே ஒளி தந்த - எங்கள்
"தாய்" என்னும் தீப ஒளி
அமரத்துவம் அடைந்த 31ஆம் நாளான இன்று
அவர்தம் ஆத்மசாந்திக்காக ஆண்டவன்
திருவடியை கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சித்து
கசிந்துருகிப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**உண்டுவத்தை**
**அல்வாய் தெற்கு, அல்வாய்.**
**குடும்பத்தினர்**

# பதினான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
## செல்லையா சின்னத்துரை
(கிளாக்கர்)

மலர்வு 06 . 04 . 1944
உதிர்வு 28 . 04 . 2007



திதி: பூர்வபக்க ஏகாதசி

ஈரேழு ஆண்டுகள் ஆனதே அப்பா!
ஈரவிழிகள் இன்னும் ஆறவில்லை
நித்தமும் உங்கள் நினைவுகள்
நீங்காமல் எமது மனதில் நிலைத்திருக்கும்

சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.
குடும்பத்தினர்

# 2ஆம் ஆண்டு நினைவலைகள்

## திரு. பொன்னையா சிவராசசிங்கம்
(ஓய்வுபெற்ற இ.போ.ச. ஊழியர்)



பிறப்பு 06.11.1954
இறப்பு 15.04.2019

[ திதி: வளர்பிறை ஏகாதசி ]

பாசம் நிறைந்தவரே
உள்ளத்தால் உயர்ந்தவரே - அப்பா
வாழ்நாளெல்லாம் எமக்காகவே -
வாழ்ந்தீர்கள்
உறவுகளை அன்புடன் அரவணைத்து
கொண்டீர்கள்
கடமைகள் அனைத்தையுமே
மனமுவந்து செய்தீர்கள்
உங்கள் பிரிவால் ஈராண்டாய்
தவிக்கின்றோம் - அப்பா.

என்றும் நினைவில்...
**குடும்பத்தினர்.**
**மீசாலை மேற்கு, மீசாலை.**

# கைதான மீனவர்களுக்கு பிணை

மன்னார், ஏப்.23
கடற்றொழில் அனுமதிப்பத்திரமின்றி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி பெருமாள் சிவகுமாரிடம் முற்படுத்தப்பட்ட குறித்த மீனவர்கள் தலா 50 ஆயிரம் ரூபா சரீரப்பிணையில் விடுவிக்கப்பட்டதுடன், மீன்பிடி உபகரணங்களும் பிணைமுறியில் விடுவிக்கப்பட்டன.

சுருக்குவலை மீன்பிடிக்கான அனுமதிப்பத்திரமின்றி மன்னார் தேவன்பிட்டி கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில், கடற்படையால் கடந்த 10ஆம் திகதி மூன்று மீனவர்கள் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மீனவர்களில் ஒருவர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியிருந்தமை கண்டுபிடிக்கப்பட்ட நிலையில், அவர் 23ஆம் திகதி வரை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டார்.

(ப-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொரோனாத் தொற்று...

தால் முடக்க நிலைமையை அறிவிக்க வேண்டும் இல்லாவிட்டால் நிலைமை மோசமடையும் என்று துறைசார் நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். இந்த நிலைமைகள் தொடர்பாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் விரிவாக விவாதித்து இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது.

அதேநேரம், குருநாகல் மாவட்டம், குளியாப்பிட்டிய பொலிஸ் பிரிவில் சடுதியாகத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதை அடுத்து அந்தப் பகுதியை முடக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குளியாப்பிட்டிய நகர் எல்லை, கஹதுல்ல, பஹல வீரஓல, சேனாதிகம மற்றும் துன்மோதர ஆகிய பகுதிகளுக்குப் பயணக் கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன. (எ-இ)

## நேற்று 520...

கள் இனங்காணப்பட்டுள்ளனர். அதையடுத்து நாட்டில் இதுவரை தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 98 ஆயிரத்து 570 ஆக உயர்ந்துள்ளது.

அதேவேளை நேற்று 216 பேர் தொற்றில் இருந்து குணமடைந்துள்ளனர். குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 93 ஆயிரத்து 884.

தற்போது 4 ஆயிரத்து 56 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். 573 பேர் தொற்றுக்குள்ளான சந்தேகத்தில் கண்காணிப்பில் உள்ளனர். (எ-இ)

## அபாய கட்டத்தில்...

நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

புதுவருடத்தைத் தொடர்ந்து தொற்றாளர்களின் எண்ணிக்கையில் கணிசமான அதிகரிப்புக் காணப்படுகின்றது.

சுகாதார உத்தரவுகளைப் புறக்கணித்துக் கடந்த இரு வாரங்களில் பொதுமக்கள் அதிக எண்ணிக்கையில் கூடி வந்தனர். அதன் விளைவுகள் தற்போது வெளிப்படுகின்றன.

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த பல நாடுகள் முயற்சி எடுத்தபோதும் இரண்டாவது மற்றும் மூன்றாவது அலை அங்கு ஏற்பட்டுள்ளது. இதற்கு அயல் நாடான இந்தியா ஒரு எடுத்துக்காட்டு.

அவ்வாறான நிலைமை இங்கும் ஏற்படலாம். அதுபோன்று நிகழாமல் இருக்கப் பொதுமக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

இது இடைக்காலக் கட்டம். இந்தக் காலகட்டத்தில் அறிகுறியற்ற தொற்றாளர்கள் சமூகத்தில் அதிகரிக்கலாம். எதிர்காலத்தில் நிகழ்வுகளுக்குக் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும். என்றார். (எ-இ)

## துணைவேந்தருக்கு...

குருதிக் குழாய் மருத்துவ சோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும், அதன்பின்னரே அவருக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய சிகிச்சை தொடர்பில் முடிவு எடுக்கப்படும் என்றும் மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (எ-இ)

## பல்கலை...

தவொரு பெயரும் வைக்கப்படவில்லை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் கடந்த 2018ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி திறந்து வைக்கப்பட்டது.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் அரசு மற்றும் இராணுவத்தின் அழுத்தம் காரணமாக, இந்த நினைவுத் தூபி கடந்த ஜனவரி மாதம் 8ஆம் திகதி இரவோடு இரவாக இடித்தழிக்கப்பட்டது. இதற்கு எதிராகப் பல்வேறு போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதனையடுத்து பல்கலைக்கழகத் துணைவேந்தர் மூத்த பேராசிரியர் சிறிசற்குணராஜாவே புதிய தூபிக்கான அடிக்கல்லை நட்டிருந்தார். தூபி நிர்மாணப் பணிகள் நிறைவுற்றுள்ளன. இன்று காலை 7 மணிக்கு தூபி திறந்து வைக்கப்படவுள்ளது.

பல்கலைக்கழக துணைவேந்தரே இதனை திறந்து வைப்பார் என்று தெரிவிக்கப்பட்ட நிலையில், அவர் மாரடைப்புக் காரணமாக நேற்றுமுன்தினம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இருப்பினும் திட்டமிட்டவாறு தூபி இன்று திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.5,26,20)

## யாழ். அரச...

திட்டப் பயனாளிகள் தெரிவு தொடர்பில் நேரில் ஆராய்வதற்கு அமைச்சு அதிகாரிகள் இன்று யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வரவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மீள்குடியமர்ந்துள்ள மக்களுக்கான வீட்டுத் திட்டத்துக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் பயனாளிகள் புள்ளிகள் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டனர். பயனாளிகள் பெயர் பிரதேச செயலகங்களில் காட்சிப்படுத்தப்பட்டன. முறைப்பாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டன. இறுதி செய்யப்பட்ட பட்டியல் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பயனாளிகள் தெரிவின் உண்மைத் தன்மையை நேரில் ஆராய்வதற்காக அமைச்சு அதிகாரிகள் யாழ்ப்பாணத்துக்கு இன்றைய தினம் வருகை தரவுள்ளனர்.

பயனாளிகள் தெரிவில் அரசியல் தலையீடுகள் இருக்கின்றன என தொடர்ச்சியாகத் தெரிவிக்கப்பட்டு வரும் சூழலிலேயே இவ்வாறானதொரு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஒ.5)

## மகாவலி...

அதிகார சபை கோரியிருந்தது. இந்த நடவடிக்கை அரசியல் தலையீடுகளை அடுத்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் 'எல்' மற்றும் 'கே' வலயங்களினுள் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி நிர்வாக மாவட்டங்களின் பெரும் பகுதிகள் உள்ளடங்குகின்றன. இவற்றை தமக்குரிய பிரதேசங்களாக அறிவித்து 2007ஆம் ஆண்டு மகாவலி அபிவிருத்தி அதிகார சபை வர்த்தமானியும் வெளியிட்டிருந்தது.

2014ஆம் ஆண்டு தற்காலிக ஏற்பாடாக, தமக்குச் சொந்தமான மேற்படி பகுதிகளில் நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் என்று கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்கு அனுமதிக் கடிதம் வழங்கியிருந்தது. இந்த நிலையில் கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் 'எல்' வலயத்தினுள் அடங்கும் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் கீழான கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு, கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய் மேற்கு, கொக்குத்தொடுவாய் மத்தி, செம்மலை கிழக்கு ஆகிய 6 கிராம அலுவலர் பிரிவுகளையும் தம்மிடம் ஒப்படைக்குமாறு மகாவலி அபிவிருத்தி அதிகார சபை கோரியிருந்தது.

இந்த நிலையில் வவுனியா வடக்கு போகஸ்வெள கிராமத்துக்கு அண்மையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வந்திருந்தார். இதன்போது மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான காணிகளில் அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கோ, நிர்வாக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கோ ஏனைய திணைக்களங்களின் அனுமதிகள் எவையும் தேவையில்லை என்று தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து கரைத்துறைப்பற்று பிரதேச செயலகத்துக்கு மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான அவர்கள் கோரும் 6 கிராம அலுவலர் பிரிவுகளையும் கையளிக்குமாறு அறிவுறுத்தல் சென்றது.

இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் உரையாற்றியிருந்தனர். நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், அதிகார சபைக்குப் பொறுப்பான அமைச்சர் சமலுடனும் உரையாடியிருந்தார். இதனையடுத்து கடந்த காலங்களைப் போன்று இந்த முயற்சி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. (ஒ.5)

## யாழ்ப்பாணத்தில்...

தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடம் மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடம் என்பவற்றில் 396 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் 17 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 4 பேரும் சுயதனிமைப்படுத்தலில் உள்ளவர்கள். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்டுள்ள மூவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் உள்ள 5 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மூவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் இருவர் தனிமைப்படுத்தலில் இருந்தவர்கள். ஒருவர் அரச திணைக்களம் ஒன்றில் அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணியாற்றும் கைதடியைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது.

கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர் சுயதனிமைப்படுத்தலில் உள்ளவர் என்று தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுளளது. மன்னார் மாவட்டத்தில் ஐந்து பேருக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ-26)

## தூக்குத் தண்டனைக்...

செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது. மிருசுவிலில் 8 பேரின் கழுத்தை அறுத்துக் கொன்றமைக்காக தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவரை விடுதலை செய்துள்ளீர்கள். நீங்கள் எவ்வாறு அத்தகைய செயல்களை அங்கீகரிப்பீர்கள்? இவ்வாறு நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகா.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

ஒரு தூக்குத் தண்டனைக் கைதியை விடுவிக்க சில பொறிமுறைகள் உள்ளன. இங்கு அவை எவையும் பின்பற்றப்படவில்லை. ஜனாதிபதி பின் கதவால் தீர்மானங்களை எடுக்கின்றார்.

தூக்குத் தண்டனை கைதியை விடுவிக்க சிறைச்சாலைகள் ஆணையாளர் பரிந்துரை முன்வைக்க வேண்டும். பின்னர் ஓய்வுபெற்ற சட்டமா அதிபர் அடங்கிய குழுவை நியமிக்க வேண்டும். பெரும் குற்றம் செய்தவர் தொடர்பில், ஜனாதிபதிக்கு சமூகப் பொறுப்பு இருக்க வேண்டும்.

நன்னடத்தை தொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்த வேண்டும். ஆனால் இவை அனைத்தும் பின்பற்றப்படவில்லை. இந்த அரசு தூக்குத் தண்டனை கைதி சுனில் ரத்நாயக்கவுக்கு மன்னிப்பளித்து விடுதலை செய்தது.

சுனில் உள்ளிட்ட இராணுவ சிப்பாய்கள் மிருசுவிலில் 8 பேரை கொலை செய்து, கழுத்தை அறுத்து புதைத்தனர். தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட அவரை விடுதலை செய்துள்ளீர்கள். நீங்கள் எவ்வாறு அத்தகைய செயல்களை அங்கீகரிப்பீர்கள்?.

கொலைகாரன் கொலைகாரன்தான். பிரேமாவதி மனம்பேரியை கொன்றதும் இராணுவச் சிப்பாயே. அவர் தூக்கு மேடைக்கு அனுப்பப்பட்டார். இராணுவ வீரர்களை விடுவிக்கின்றோம் என நீங்கள் கொடி தூக்க முடியாது. என்றார். (எ-இ)

## நள்ளிரவுக்...

யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடம் இருந்து 18 பவுண் தங்க நகைகள், பணம் மற்றும் வாள்கள் என்பவை மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கும்பல் வயோதிபர்கள் தனித்து வாழும் வீடுகளை இலக்கு வைத்துக் கொள்ளைகளில் ஈடுபடுகின்றது என்று கூறப்படுகின்றது. நள்ளிரவுவேளை வீடுகளுக்குள் புகும் இந்தக் கும்பல் வாள்களைக் காட்டி அச்சுறுத்தி கொள்ளையில் ஈடுபட்டுள்ளது.

அண்மையில் புன்னாலைக்கட்டுவன் பகுதியில் உள்ள பூசகரின் வீடொன்றுக்குள் புகைக்கூண்டு வழியாக நுழைந்த கும்பல் ஒன்று வாள்களைக் காட்டி அச்சுறுத்தி நகைகள் மற்றும் பணத்தைக் கொள்ளையிட்டுத் தப்பித்துச் சென்றிருந்தது. கந்தரோடை, நல்லூர், கந்தர்மடம் ஆகிய இடங்களிலும் இதேபாணியிலான கொள்ளைகள் அண்மையில் நடந்திருந்தன.

இது தொடர்பில் தீவிர விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டிருந்தனர். விசாரணைகளின் அடிப்படையில் இந்தக் கும்பலின் பிரதான நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்ஸ்ஸின் வழிகாட்டலில், உப பொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலைமையிலான குழுவே இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தது.

கைது செய்யப்பட்டவர் 22 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபரிடம் இருந்து நகைகளை வாங்கியமை, நகைகளை விற்றுக் கொடுத்தமை மற்றும் அடகு பிடித்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களில் மேலும் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட அனைவரும் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்வளம் இருந்தும் வீடு கட்ட அதிகாரிகள் அனுமதிக்கவில்லை

## வீட்டுத்திட்ட பயனாளிகள் கவலை

சாவகச்சேரி ஏப்.23

**வீடமைப்புக்கு வழங்கப்படும் நிதியில் மணல் கொள்வனவுக்கு பெருமளவு தொகை செலவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று பயனாளிகள் சிலர் கவலை தெரிவித்தனர்.**

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இவ் வருடத்துக்கான வீடமைப்புத் திட்டங்க ளுக்கு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் பெயர்ப்பட்டியல் அந்தந்த பிரதேச செயலகங்களால் வெளியிடப்பட்டு வருகிறது. சில பிரதேசங்களில் மண்வளம் காணப்படுகின்ற போதிலும் அவற்றை வீட்டுத்திட்டப் பயனாளர்களுக்கு வழங்க பிரதேச செயலகங்கள் மறுத்து வருவதால் அப் பிரதேசங்களில் தெரிவுசெய்யப்படும் பயனாளிகள், அதிக கட்டணம் செலுத்தி மணல் கொள்வனவு செய்ய வேண்டிய நிலை காணப்படுகிறது எனப் பாதிக்கப்பட்ட பயனாளிகள் தெரிவித்தனர்.

தென்மராட்சி, தீவகம், பச்சிலைப் பள்ளி, வடமராட்சி மற்றும் வடமராட்சி கிழக்கு போன்ற பிரதேசங்களில் வீடுகள் அமைப்பதற்குரிய மண்வளம் நிறையவே காணப்படுகிறது. திட்டப் பயனாளர்களுக்கு குறிப்பிட்ட அளவு மணல் வழங்க பிரதேச செயலகங்கள் முன்வருமாயின், ஏற்படவுள்ள செலவை ஓரளவு குறைக்க முடியுமெனவும், வீட்டுத்திட்டப் பயனாளர்களுக்கு மணல் வழங்குவதற்கான அனுமதிப் பத்திரம் வழங்க பிரதேச செயலகங்கள் கட்டுப்படுத்தப்பட்ட அளவில் அனுமதிப் பத்திரம் வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

"வீட்டுத்திட்டப் பயனாளர்களுக்கு மணல் அனுமதி வழங்காமல், தனியாருக்கு தேவையான அளவு மணல் பெற அனுமதிப் பத்திரம் வழங்குகின்றனர். அவர்களிடத்தில் பெருமளவு தொகை கொடுத்து மணல்பெற்று வீட்டுத் திட்ட வேலைக்கு பயன்படுத்தும் நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது. கடந்த காலங்களில் வீட்டுத்திட்டங்கள் பெற்றவர்களில் அனைவரும் தனியாரிடம் அதிக விலை கொடுத்து மணலைப் பெற்றனர். எனவே தற்போது தெரிவுசெய்யப்பட்டுள்ள பயனாளிகளுக்கு வீட்டின் தன்மைக்கேற்ப மணல் வழங்க அந்தந்த மாவட்டச் செயலாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று பயனாளிகள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஐ-9)

**வேலையாட்கள் தேவை**

சைவ உணவகமொன்றிற்கு அனுபவமுள்ள சமையலாளர், சமையல் உதவியாளர் தேவை.
வண்ணை சாந்தையர்மடம்.
கற்பக விநாயகர் கோவில் அருகாமை (K.K.S. றோட்)
074 093 0200

**மணமகள் தேவை**

கொழும்பை வதிவிடமாக கொண்ட யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த வயது 38, விசாகம், BSc (Hons) Computing (UK). தற்பொழுது கொழும்பில் Semi Govt, நிறுவனத்தில் நிரந்தர வேலை செய்கின்ற பட்டதாரி மணமகனுக்கு அரச அல்லது தனியார் துறையில் தொழில் புரிகின்ற மணமகள் தேவை.
தொடர் புகளுக்கு பெற்றோர்:-
077 239 3471

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் உரும்பிராய் கோப்பாய் வீதியில், மெயின் றோட்டுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. 1½ பரப்பாக பிரித்துக்கொடுக்கப்படும்.
(கோப்பாய் வீதி, கிருஷ்ணன் கோயிலுக்கு அருகாமை)
தொடர்பு கொள்ளும் நேரம் காலை 9.00 மணிமுதல் மாலை 5.30 மணிவரை **தொடர்பு :**
077 468 3354, 077 288 0152, 077 203 6402

**காணி விற்பனைக்கு**

தெல்லிப்பழை கிழக்கு ஐயனார் வீதியில்
2 பரப்புக்காணி மட்டும்
விற்பனைக்கு உண்டு
(தெல்லிப்பழை வைத்தியசாலையில் இருந்து 600 m தூரம்)
பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி தொடக்கம்
மாலை 6.00 மணி வரை (தரகர் தேவையில்லை)
ஒரு பரப்பு 5 இலட்சம்
077 814 7389, 077 614 7333

# அமரர் ஊர்தி சேவை வாகனத்தை மாநகர சபை வளாகத்தில் நிறுத்துக

## சமூகப்பற்றாளர்கள் கவனவீர்ப்பு



மட்டக்களப்பு, ஏப்.23

ஜி.கே. அறக்கட்டளையின் இலவச அமரர் ஊர்தி சேவை வாகனத்தை மட்டக்களப்பு மாநகர சபை வளாகத்திலேயே நிறுத்தி வைப்பதற்கு ஆதரவு தெரிவித்து மட்டக்களப்பு சமூகப் பற்றாளர்களால் கடந்த செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு மாநகரசபை முன்றலில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

ஏழை மக்களின் இறுதிக் கட்டத்தில் இலவச சேவையை வழங்கி வருகின்ற அமரர் ஊர்தி சேவையில், தங்களது அதிகார மோதலை வெளிப்படுத்துவதை ஆணையாளர் உடன் நிறுத்த வேண்டும் எனவும், அரசியல் பின்புலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவது தடுக்கப்பட்டு மக்களின் சேவைக்காக இயங்கும் அமரர் ஊர்தி சேவை வாகனத்தை மாநகர வளாகத்திலேயே நிறுத்தி வைக்க எவ்வித இடையூறும் வழங்காது அனுமதியளித்து மக்களுக்கான சேவைகளைத் தொடருவதற்கு ஆவன செய்ய வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர். (ப-150)

# போட்டிப் பரீட்சை 24 ஆம் திகதி

யாழ்ப்பாணம்,ஏப்.23

வடக்கு மாகாண சமூக சேவை உத்தியோகத்தர் பதவிக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை நாளை 24 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

குறித்த பரீட்சைக்கு விண்ணப்பித்த தகைமையுடைய பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் யாவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் "செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக் குழு, வடக்கு மாகாணம், இல 393 / 4, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்" என்னும் முகவரியுடனோ அல்லது 021 2219939 தொலைபேசி இலக்கத்துடனோ உடனடியாக தொடர்புகொள்ளுமாறு வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் சி.திருவாகரன் அறிவித்துள்ளார். (ஐ)

**31 ஆம் நாள் நினைவஞ்சலி**

மண்ணகப் பிறப்பு
12 • 12 • 1943

விண்ணகப் பிறப்பு
24 • 03 • 2021



**அமரர் திரு. சிங்கராயர் யேசுதாசன்**
(மாறன்)
(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் - யாழ். மாநகரசபை)

ஆண்டவரே! உமது பேரன்பு எனக்குக்
கிடைக்கச் செய்யும் உமது வாக்குறுதியின்படி
நீர் என்னை மீட்பீராக. தி.பா. 119:4

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இன்று (23.04.2021) வெள்ளிக்கிழமை காலை 5.45 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். இரங்கல் திருப்பலியிலும் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வழிபாட்டிலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 32/13, 2ஆம் குறுக்குத் தெரு,
பாஷையூர், யாழ்ப்பாணம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
021 222 0742, 077 471 8006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெற் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ... கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.